REGD. M. 4842

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுச்சந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 4—4—48 | இதழ் 43

ஒதுங்கியிருந்த கூட்டம்!

—:(o):—

"சில குறிப்பிட்ட முதலாளிகளுக்குப் பிரதிநிதித்வம் வகிக்கும் அரசியல் ஸ்தாபனமாகக் காங்கிரஸ் ஆகிவிட்டது. எப்போதும் காங்கிரசிலிருந்து வெகு தொலைவில் ஒதுங்கியிருந்த இக்கூட்டம் காங்கிரசுக்குள் புகுந்து கொண்டு ஓரளவுக்கு அதைத் தன்வசப்படுத்திக் கொண்டு விட்டது. காங்கிரஸ் சோஷலிசம் பற்றிப் பேசுகிறது. ஆனால் அதை நடைமுறைக்குக் கொண்டுவர விரும்பவில்லை."

ஜெயப்பிரகாஷ்

28—3—48

என் வாழ்வு

16-ம் பக்கத் தொடர்ச்சி

எண்ணம்தோன்றுவதுண்டு. உலகமே அநித்தியம்—பிரபஞ்சமே மாயை—இந்த லோகத்திலே என்ன இருக்கிறது—பணம் பாஷாணம்—இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லை—காயமே இது பொய்யடா—மனித வாழ்வு இந்திர ஜாலம்—என்று ஏதேதோ பேசுகிறார்கள் வேதாந்தம். ஆனால், அதே மக்கள், பாட்டும் கூத்தும் தேடுகிறார்கள். பெண்கள் இருக்கக் கண்டால் போதும், தேன் கண்ட ஈ போல் தேங்குகிறார்கள். எத்தனை விதமான கோணல் சேட்டைகளைச் செய்கிறார்கள். சட்டையைச் சரிப்படுத்திக் கொள்வதும் தலையைச் சீவிவிட்டது கலைந்து விட்டதோ என்ற கவலையால் விநாடிக் கொருமுறை தடவித் தடவிப் பார்ப்பதும் முகத்தை நிமிஷத்துக் கொருமுறை கைக்குட்டையால் துடைப்பதும், கண் சிமிட்டுவதும் கைத்தாளமிடுவதும், கனைப்பதும், காதல்பாட்டுகள் பாடுவதும், கலகலவெனச் சிரிப்பதும், பணத்தை எடுத்து வீசுவதும், படாடோபம் செய்வதுமாக இருக்கிறார்கள். இத்தகைய ஆண்டவன் பூஜைக்கு என்ற பெயரை வைத்து நடத்தப்படுகிற திருவிழாக்களிலே மக்களின் எண்ணமெல்லாம் ஆண்டவன் அறிவார் என்று சொல்கிறார்கள் பெரியோர்கள். தவன உற்சவத்துக்கு வந்தவர்களின் எண்ணத்தை ஆண்டவன் உள்ளபடி அறிந்திருப்பின், நான் சொல்கிறேன், ஒரு நிமிடம்கூட அங்கே இருக்கமாட்டார். எழுந்து ஓடிப்போய், கோயில் கதவைத் தாளிட்டுக்கொண்டு விடுவார். “உங்கள் முகத்திலேயே நான் விழிக்கமாட்டேன். என்னைச் சாக்காக வைத்துக்கொண்டு நீங்கள் கேளிக்கையாக இருக்கவும் காமச் சேட்டைகள் செய்யவும், ஆடம்பர ஆட்டம் ஆடிவருகிறீர்கள். நான் இதற்குத்தானா பயன்பட்டேன். நான் என்ன பித்துக் கொள்ளியா?” என்று கூறுவார். மாயை, மாயை என்று வேதாந்தம் பேசும் மக்கள் உள்ளபடி மாயை என்று உலகத்தையோ உலக சுகபோகத்தையோ கருதினால், ஊரிலே இவ்வளவு திருவிழாக்கள் நடைபெறாது. இத்த[illegible]

அதிகம் வரும், ஏனெனில், எங்கள் எதிரில்தான் இந்த “திருவிளையாடல்கள்” அதிகமாக நடைபெறும். எங்கள் வீடு ஏறக்குறைய ஊரார் பூராவுக்கும் தெரியும். எனவே, எங்கள் எதிரில் அதிகமான கோணல் சேட்டைகளும், குறும்புப் பேச்சும் யாரும் பேசமாட்டார்கள். அதிலும் அக்காவிடம் ஜெமீன்தார் வர ஆரம்பித்த பிறகு எங்களுக்குக் கௌரவம் அதிகம். இருந்தாலும், ஓரிரு துடிதுடிப்பான இளைஞர்கள் சாக்கிட்டுப் பேசுவார்கள்.

“ஏண்டா ரங்கா? எப்படி உருப்படி?” என்பான் ஒருவாலிபன்.

“இந்த ரகங்களிலே எது வேண்டும் சுவாமிகாள்” என்பான் வேறொருவன்.

“உருப்படி சரியானதுதாண்டா! ஆனால் அது ஜமீன்தார் சாமான்” என்பான் மூன்றாமவன்.

எல்லோருமாகப் பிறகு சிரிப்பார்கள். நாங்கள் சுளித்த முகத்துடன் நிற்போம். காலாடிகள் ஏதேதோ பேசுகிறார்கள் என்று கூறுவோம்.

தவன உற்சவக் காட்சியை நாங்கள் அன்று களித்துக் கொண்டிருக்கையில், நான் முத்துவைப் பற்றி எண்ணிக்கொண்டு, அங்கும் இங்கும் பார்த்தபடி இருந்தேன். நான் எங்காவது வெளியே போனால், முத்து, வருகிற வாடிக்கையுண்டு. அன்றுவெகுநேரம்மட்டும் வரவில்லை. ஏன் வரவில்லையென்று யோசித்துக் கொண்டே இருக்கையில் முத்து வரக்கண்டேன். அவன் முகம் ஜொலித்தது. ஆனால் அவன் பக்கத்திலே வந்த இளமங்கையின் வைரக் கம்மலின் ஒளி அதைவிட அதிகமாக ஜொலித்தது. அவன் வீட்டார் பலர் கூட இருந்தனர். ஆனால் அந்த இளமங்கையும் அவனுமே தனியாகப் பேசுவதும் சிரிப்பதுமாக வந்தார்கள். முத்துவுக்கு என்னைப்பார்க்கக் கூட நேரமில்லை. என் நினைவே இல்லை. நாங்கள் இருந்த பக்கமாக அவர்கள் நடந்து சென்றபோது அந்த மங்கை தற்செயலாக என்னைப் பார்த்தாள். உடனே திரும்பி முத்துவை நோக்கி ஏதோ கேட்டாள்.

“அவள் ஒரு தேவடியாள், டீ. ஜீ.” என்று முத்து பதில் சொல்லிக் கொண்டே வழி நடந்தான். [illegible]

பெண், நான்யார் என்றுகேட்டிருக்க வேண்டும். அதற்கு முத்து, என்உயிரினும் இனியவன் என நான் எண்ணிய முத்து, அலட்சியமாக நான் ஓர் தாசி என்று அவளிடம் கூறினான். அவள் சிரித்தாள்.

(தொடரும்)

விளம்பரம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சித்திரைப் பள்ளிக்கூடம்

முன்னரே ஓரளவு உயர்தரப் பள்ளிக்கூடக் கல்வி கற்றுப் பல்கலைக் கழகக் கல்வி கற்கச் சந்தர்ப்பம் பெறாத மக்கள் பொருட்டு இப்பள்ளிக்கூடம் அண்ணாமலை நகரில் 6 வாரம் நடைபெறும். அதில் எல்லாப் பாடங்களும் தமிழிலே கற்பிக்கப்படும். ஆங்கிலம், தமிழிலக்கியம், உலக சரித்திரம், விஞ்ஞானம், அரசியல் நூல், பொருளாதார சாஸ்திரம் கணக்கு முதலியவை கற்பிக்கப்படும். வகுப்புகள் காலை 8 மணி முதல் 12 மணிவரை நடைபெறும். சாயங்காலத்தில் பந்தாடவும் தேகப் பயிற்சி செய்யவும் வசதிகள் அளிக்கப்படும். நடுத்தர வயதுடையவர்களும் வயது முதிர்ந்தவர்களும் பொதுவறிவு பெறுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

தங்குவதற்கு ஹாஸ்டலில் இடம் கொடுக்கப்படும். போதனைக்காகக் கட்டணம் வசூலிப்பதில்லை. சாப்பாட்டுச் செலவு சுமார் ரூபாய் 20 ஆகலாம். இதை முன்பணமாகக் கொண்டு வரவேண்டும்.

மே மாதம் 10-ஆம் தேதியிலிருந்து இப்பள்ளிக்கூடம் தொடங்கும். சேரவிரும்புகிறவர்கள் உடனே விண்ணப்பம் பெற்றுப் பூர்த்தி செய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு மே 1-ஆம் தேதிக்குள் அனுப்பலாம்.

ரிஜிஸ்ட்ரார், அண்ணாமலை
யூனிவர்சிட்டி, அண்ணாமலைநகர்.

சி. என். ஏ. எழுதிய புதிய நூல்கள்

1. ஆரிய மாயை — 1—0—0.
2. மே தினம் — 0—5—0.
3. “உலகப் பெரியார் காந்தி” (C.N.A ரேடியோ-சொற்பொழிவு)

திராவிடப்பண்ணை
தெப்பக்குளம். திருச்சி.

காஞ்சிக் கடவுளுக்குக் கல்லடி

[நக்கீரன்]

திருச்சங்கமங்கை என்னும் ஊரிலே சாக்கிய நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். இவருக்கு எந்தச் சமயம் உண்மையான சமயம் என்பது புலப்படவில்லை. உண்மைச் சமயம் எது என்பதை அறிந்து, அச்சமயவழி நிற்பதே முறை என்றெண்ணிய சாக்கியர், அதன் பொருட்டுக் காஞ்சீபுரத்தை அடைந்தார். காஞ்சீபுரத்திலிருந்து கொண்டு, பல சமயங்களையும் அவை பற்றிய விளக்கங்களையும் ஆராய்ந்தார். அவ்வாராய்ச்சியின் பயனாக அவர் பௌத்த சமயமே உண்மையான சமயம் என்பதை அறிந்து அச்சமயவழி நிற்கத் தலைப்பட்டார். அப்பொழுதும் அவர் தம்முடைய ஆராய்ச்சியை மட்டும் விட்டுவிடவில்லை. மேலும் பல சமயநூல்களை ஆராய்ந்த வண்ணமாயிருந்தார். கடைசியில் அவருடைய ஆராய்ச்சியின் முடிவு, சிவநெறியே செந்நெறி என்பதை விளங்கச் செய்தது. அதனால், அவர் சைவ சமயத்தையே தம்முடைய வழிபாட்டுக்குரிய சமயமாகக் கொண்டு, அவ்வழி நின்றார். என்றாலும், அவர் தாம் முன்பு மேற்கொண்ட பௌத்த கோலத்தை மட்டும் விடவில்லை. பௌத்த கோலத்தில் நின்றுகொண்டு சிவவழிபாடு செய்யமுற்பட்ட சாக்கியர், சிவலிங்கத்தைக்கண்டு வழிபட்ட பின்னரே உணவு கொள்வது என்ற உறுதி கொண்டார். அதற்காகச் சிவலிங்கத்தைத் தேடினார். ஒருநாள், ஒரு வெளியிலே உள்ள சிவலிங்கத்தைக் கண்டார். கண்டதும் அதனை வழிபட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால், சிவலிங்கத்தை எப்படி வழிபடுவது என்பது தெரியவில்லை. இந்த நிலையில் அவர் எதிரே ஒரு செங்கல் தென்பட்டது. அதனை எடுத்து அங்கு காணப்பட்ட சிவலிங்கத்தின் மீது வீசி எறிந்தார். அடுத்த நாளும் அப்படியே செய்தார். அதனையே அவர் சிவலிங்கத்துக்குச் செய்யும் வழிபாடாகக் கொண்டு, ஒவ்வொரு நாளும் சிவலிங்கத்தைக் கல்லால் அடிக்கும் அரும்பணியை அயராது செய்து வந்தார். ஒருநாள் அவர் அந்தப் பணியைச் செய்ய மறந்து உண்ணப் புகுந்தார். அப்போது, "இன்று சிவலிங்கத்தைக் கல்லால் அடிக்கமறந்து விட்டோமே" என்று எண்ணிச் சிவலிங்கம் இருக்கும் இடத்தை அடைந்து, ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின் மீது எறிந்தார். உடனே சிவன் அங்கு வந்து அவரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு சிவலோகத்துக்குச் சென்றுவிட்டார். இப்படியும் ஒரு நிகழ்ச்சி பெரிய புராணத்தில் காணப்படுகின்றது.

இங்கு பேசப்படும் சாக்கியர், முதலில் எந்தச் சமயவழி நின்றார் என்பதனை அறியப் புராணத்தில் எவ்வித சான்றும் இல்லை. திருச்சங்கமங்கை என்னும் ஊரிலே வேளாளர் மரபிலே தோன்றியவர் என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதனைக்கொண்டு, அவரோ அல்லது அவரது பெற்றோர்களோ எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று எப்படிக் கூறமுடியும்? சாக்கியருடைய பெற்றோர்கள் கடைப்பிடித்து ஒழுகிய சமயம் எது என்பதனையும், அதனையே சாக்கியாரும் கடைப்பிடித்து ஒழுகினார் என்பதனையும் வரலாறு எழுதிய சேக்கிழார் குறிப்பிடாமல், வறிதே, எந்தச் சமயவழி நின்றால் பிறப்பிறப்புத் துன்பங்களை ஒழிக்கலாம் என்று கருதிய சாக்கியர், அத்துறையில் ஆராய்ச்சி செய்யமுற்பட்டார் என்று கூறுவது, ஒரு வரலாற்றை முழுவடிவத்தில் எடுத்து விளக்குவதாகவோ, அல்லது அந்தவரலாறு உண்மையென்று ஒப்புக்கொள்ளத் தக்கதாகவோ ஏற்படாது. சாக்கியர் முதலில் மேற்கொண்டிருந்த சமயம் இது, அல்லது அவரது பெற்றோர்கள் மேற்கொண்டிருந்த சமயம் இன்னது என்று கூறி, சாக்கியருக்கு அந்தச் சமய முறைகள் எதுவும் பிடிக்கவில்லை; எனவே, அவர் பிறப்பிறப்புத் துன்பங்களை நீக்கக்கூடிய சமயம் எது என்பதை அறிய ஆவல்கொண்டார்; அதற்காக ஆராய்ச்சிகள் பல செய்தார் என்று கூறப்பட்டிருந்தாலாவது, இங்குபேசப்படும் நிகழ்ச்சியில் ஓரளவுக்காவது உண்மை இருக்கக்கூடும் என்று கருதமுடியும். அங்ஙனமன்றி, ஒரு உரில் ஒருவர் இருந்தார். அவருக்கு எந்தச்சமயம் உண்மையான சமயம் என்று அறிவதில் ஆவல் உண்டாயிற்று என்ற முறையில் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்கி அதற்குக் கண் மூக்கு வைத்து அதனை ஒரு உண்மை நிகழ்ச்சியாக்கிக் காட்ட முயல்வதை அறிவாராய்ச்சியுடைய எவருமே நம்பமாட்டார்கள்.

சாக்கியருக்குத் திடீரென்று பிறப்பிறப்புத் துன்பங்களை நீக்கிக் கொள்வதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏன் தோன்றிற்று? எப்படித் தோன்றிற்று? சாக்கியர், தாம் மேற்கொண்டிருந்த சமயத்தில் பிறப்பிறப்புத் துன்பங்களை நீக்குவதற்குரிய வழிகள் காணப்படாததால்தானே, அதற்குரிய வழிகளை வகுத்துக் காட்டும் ஒரு சமயத்தை நாட விரும்பியிருக்க வேண்டும். அப்படியானால், அவர் மேற்கொண்டிருந்த அந்தச் சமயம் யாது? தெரியாது! யாருக்கு? சேக்கிழாருக்கு. அவருக்கு மட்டுமல்ல. பெரியபுராணம் எழுதுவதற்கு முதல்நூல் வகுத்துக் கொடுத்த நம்பியாண்டார்நம்பிக்கும் அந்த விவரம் தெரியாது.

இனி, ஒருவேளை, சாக்கியர் எந்தச் சமயத்தையும் மேற்கொண்டிருக்கவில்லை; ஆதலால், அவர் முதலில் கடைப்பிடித்தொழுகிய சமயம் இதுதான் என்று எப்படிக் கூறமுடியும் என்பதாகவும் சிலர் கருதக்கூடும். ஆனால், இதனை எப்படி ஒப்புக்கொள்வது? ஒரு சமயத்தையும் சாராத ஒருவருக்குப், பிறப்பிறப்புத் துன்பங்களை யாதாயினும் ஒரு சமயவழி நின்றுதான் நீக்கமுடியும் என்ற எண்ணம் ஒருபோதும் உண்டாகாது. பிறப்பினாலும் இறப்பினாலும் துன்பங்களே உண்டாகின்றன என்ற கோட்பாடு சமய நூற்களில்தான் வலியுறுத்தப்பட்டுள்ளன. சமயத்தொடர்பற்ற பொது அறிவு நூல்களில் பிறப்பிறப்புக்களைத் துன்பம் தருபவை என்று கூறப்படவில்லை. எனவே பிறப்பிறப்பினால் துன்பமே உண்டாகும் என்ற விளக்கத்தைச் சாக்கியர் ஏதோ ஒரு சமயநூலில் படித்திருக்கிறார். எனவேதான் பிறப்பிறப்புத் துன்பங்களை நீக்கிக்கொள்வதற்கு வழி காட்டும் ஒரு சமயத்தை அவர் சார விரும்பினார். பிறப்பிறப்பினால் துன்-

...பமே நேரிடும் என்ற விளக்கர், ஒரு சமயத்தையும் சாராது பொது நெறியில் நிற்கும் ஒருவருக்கு ஒரு போதும் உண்டாகாது. அத்தகைய ஒருவர் பிறப்பையோ இறப்பையோ துன்பமாகக் கருதவும் மாட்டார். பிறப்பதும் இறப்பதும் இயற்கை என்ற அளவோடு பிறப்பிறப்பைக் குறித்த ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு, பிறந்தபின் இறக்கும் வரையில்தான் எப்படி வாழ்க்கையை நடத்திச் செல்வது? தன்னுடைய வாழ்க்கை முறை தனக்கும் பிறர்க்கு எந்தெந்த வகையில் பயன்படுகின்றது என்பனவற்றிலேயே தன்னுடைய கருத்தைச் செலுத்துவானேயன்றிப், பிறப்பதையும் இறப்பதையும் துன்பமாகக் கருதி, அத்துன்பத்தை ஒழிப்பதற்கு வழி என்ன? எந்தச் சமயத்தைப் பின்பற்றினால் இத்துன்பத்தை நீக்கலாம் என்ற பொருளும் பயனுமற்ற துறைகளிலே இறங்கித் தன் காலத்தை வீணாக்கமாட்டான். ஒரு சமய வழி நிற்பவன்தான், அச்சமயத்தில் பிறப்பிறப்புத் துன்பங்களை ஒழிப்பதற்கு வழி கூறப்படவில்லையென்றும், அதற்கு இன்னொரு சமயத்தைக் கண்டுபிடித்தாக வேண்டுமென்றும் கவலைப்படுவான்.

இங்கு பேசப்படும் சாக்கியருக்கும் இந்த நிலையே ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லையேல், பிறப்பிறப்புத் துன்பத்தினின்றும் விடுதலை அடையும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால், சாக்கியர், முதலில் எந்தச் சமயத்தைக், கடைப்பிடித்து வந்தார் என்பதைச் சேக்கிழாரோ அவருக்கு முந்திய நம்பியாண்டார்நம்பியோ கூறவில்லை. இதனை அவர்கள் ஏன் கூறவில்லை? தெரியாததால் கூறாது விட்டார்களோ, அல்லது தெரிந்தும் 'கூறக் கூடாது' என்ற காரணத்தால் மறைத்தார்களோ என்பது பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினால், அது, மிக விரியும். எனவேசாக்கிய நாயனாரின் நிகழ்ச்சியைப் புராணத்தில் உள்ளபடியே ஆராய்வோம்.

திருச்சங்கமங்கை என்னும் ஊரில் இருந்த சாக்கியர், பிறப்பிறப்பினால் ஏற்படும் துன்பத்தை நீக்குவதற்குரிய வழி எது என்பதைத் தம்முடைய ஊரில் இருந்துகொண்டே தெரிந்துகொள்ளமுடியவில்லை. பிறப்பிறப்பினால் ஏற்படும் துன்பத்தை நீக்குவதற்குரிய வழியைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு ஊரைவிட்டு இன்னொரு ஊருக்குப் போகவேண்டுமா? புகை வண்டி செல்லாத ஊரில் இருக்கும் ஒருவன், அதைப் பார்ப்பதற்காகப் புகைவண்டி செல்லும் ஊருக்கும் போவது போல், சாக்கியரும் தம்முடைய ஊரைவிட்டுக் காஞ்சிபுரம் செல்கிறார். சாக்கியருக்குக் கல்வியறிவு இல்லை; எனவே சமய நூல்களைப் படித்து அது குறித்த உண்மைகளை அறிய முடியாது போயிற்று; அதுமட்டுமன்று; அவருடைய ஊரில் சமய நூல்களைக் கற்றுத் தெளிந்த எவரும் இல்லை; அதனாலேதான் அவர் தம்முடைய ஊரை விட்டுக் காஞ்சீபுரம்சென்றார் என்று கொள்வதானாலும், அவர் காஞ்சீபுரத்துக்குச் சென்றதற்குச் சொல்லப்பட்ட இரு காரணங்களில் பின்னதை ஒப்புக்கொண்டாலும் முன்னதை எவருமே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால், சாக்கியர் கல்வியறிவில் சிறந்தவர் என்பது மட்டுமல்ல, அவர் ஒரு ஆராய்ச்சி நிபுணர் என்றும் பெரியபுராணத்திலேயே கூறப்பட்டுள்ளது. எனவே, அவர், கல்வியறிவு இல்லாத காரணத்தால் காஞ்சீபுரம் சென்றார் என்று கூறமுடியாது. ஒரு வேளை தம்மைப் பார்க்கிலும் கல்வியறிவிலும், சமய ஆராய்ச்சியிலும் திறமையுடையோர் காஞ்சீபுரத்தில் இருக்கின்றனர்; எனவே அங்கு சென்று தம்முடைய ஐயப்பாட்டினை நீக்கிக் கொள்ளலாம் என்றுஎண்ணிக் காஞ்சீபுரம் சென்றார் என்றால், அதனை யாரும் தவறென்று கொள்ளமாட்டார்கள்.

இனிக், காஞ்சீபுரம் சென்ற சாக்கியர், பல வழிகளில் தம்முடைய ஆராய்ச்சியைச் செய்து, பௌத்த சமயத்தைத் தழுவி, அச்சமயவழி ஒழுகினார் என்றும், அந்த நாளிலும் அவர் தம்முடைய ஆராய்ச்சியை நிறுத்தாமல் நடத்தி வந்தார் என்றும், கடைசியில், சைவசமயமே தம்முடைய எண்ணத்தை நிறைவேற்றி வைக்கக்கூடிய 'சிறந்த' சமயமெனக் கண்டு, அச்சமய வழி நின்றார் என்றும் கூறப்படுகின்றது. இது, ஒருகால், அவர் செய்து முடித்துள்ள ஆராய்ச்சியின்படி, அவரால் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாக இருக்கலாம். இதனையும் நாம் தவறென்று கூறவில்லை. ஆனால்; அவர் தம்முடைய ஆராய்ச்சியை ஏன் இந்த அளவோடு நிறுத்தினார் என்பதுதான் எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முதலில் அவரால் செய்யப்பட்ட ஆராய்ச்சி, அவருக்குப் புத்த சமயத்தையே உண்மையான சமயம் எனக் கொள்ளும்படி செய்தது. அதன்படி அவர் புத்தசமயத்தைத்தழுவி, அச்சமயத்திற்குரிய வடிவத்தையும் பூண்டு, அவ்வழி நிற்பாராயினர். ஆனால் தம்முடைய ஆராய்ச்சியை மட்டும் நிறுத்தவில்லை. புத்தசமயத்தைத் தழுவியும், அதுவே பிறப்பிறப்புத் துன்பத்தை ஒழிப்பதற்கு வழி அமைத்துத் தந்தும், அச்சமயவழி நிற்கும் உறுதியை அளித்த பின்னரும், தம்முடைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திய சாக்கியரின் போக்கு விந்தையாகவே இருக்கிறது.

தம்முடைய ஐயப்பாட்டினை நீக்கிக்கொள்ள விரும்பிய சாக்கியர், பௌத்தசமயத் துறையில் புகுந்து ஆராய்ந்ததன் பயனாக அவருடைய ஐயம் ஒருவாறு நீங்கிப், பௌத்த சமயமே தாம் வழிபடக்கூடிய சமயம் என்ற முடிவுக்கு வந்தாராயினும், அதனையே முடிந்த முடிபாகக்கொள்ளுதல் கூடாது; மேலும் பலசமயங்களை ஆராய வேண்டுமென்ற எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி போடாமல் அதனை வளர்த்துக்கொண்டிருந்த நிலையில், திடீரென்று, அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிப்பது போல், புத்த சமயத்தைத் தழுவியதோடுமட்டும் நின்று விடாமல், அச்சமயத்துக்குரிய வடிவத்தையும் கொண்டது ஏன்?

"புத்த சமயத்தை ஆராய்ந்து, அதுவே உண்மைச் சமயம் எனக் கண்ட நீ ஏன் அச்சமயத்துக் குரியவடிவங்கொள்ளமறுக்கிறாய்" என்று அவரை யாராவதுகேட்டார்களா? அப்படி யாரவது கேட்டிருந்தாலும்,

"நான் புத்தசமயத்தைஆராய்ந்து, அதில் சில உண்மைகள் இருப்பதைஒப்புக் கொண்டேனாயினும், இன்னும் என்னுடைய ஆராய்ச்சி முடிவடைந்து, நான் கொண்ட ஐயம் நீங்கவில்லை; எனவே நான் இந்த அளவோடு திருப்தி அடைந்து என்னுடைய எண்ணம் நிறைவேறி விட்டதாகப்பாசாங்கு செய்யமாட்டேன்; இன்னும் பல சமய உண்மைகளையும் ஆராயப்

(18-ம் பக்கம் பார்க்க)

தில்லைத் தீட்சிதர் திட்டம்!

மாடு தின்னும் புலையா, உனக்கு மார்கழித் திருநாளா? என்றல்லவா, கேட்டார் தீட்சிதர், தில்லைத்தலம் சென்று சிவலோக நாதனைக் கண்டு சேவிக்க விரும்பிப் பணிவுடன், உத்தாரம் தாரும் ஐயே! என்று கேட்ட நந்தனாரைப் பார்த்து. அவரோ, நாளைப் போகாமல் இருப்பேனோ என்று கசிந்து கூறி, காலில் வெள்ளெலும்பு முளைத்த நாள் முதலாய் நான் அடிமைக்காரனல்லவா, என்று—அழுகுரலில் பேசிப் பார்த்தார். ஆணவத்துடன் தந்திர சுபாவமும் கொண்ட தீட்சிதர், ஓர் நிபந்தனை விதித்தார் — நாற்பது வேலி நிலத்தையும், உழுது பயிரிட்டு, அறுவடையும் செய்து முடித்து விட்டு, மார்கழிமாதம் திருவாதிரை நாள் காணச் செல்லடா நந்தா, என்று கூறினார். ஓரிரவில், நாற்பது வேலி நிலமும் உழுது பயிரிட்டு அறுவடையும் செய்தாகவேண்டும். இது நிபந்தனை. அன்று தீட்சிதர், நந்தனாருக்கு விதித்தது.

இன்று, இந்திய சர்க்காரை ஏற்று நடத்தும் காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவர்களும், அவர்களை அர்ச்சிப்பதால் மட்டுமே உயிர் வாழ முடியும் என்ற நிலையை உண்டாக்கிக்கொண்டு உழலும் ஏடுகளும், இதே முறையிலே, இப்போது இலட்சியவாதிகளுக்கு ஓர் நிபந்தனை விதிக்கின்றனர் —"சமதர்மபுரியைக் காணவேண்டுமா, சரி, காண அனுமதிக்கிறோம், ஆனால் ஓர் நிபந்தனை உண்டு, அதைக் கேளாய் தம்பி உற்பத்தியைப் பெருகச் செய். உன் கஷ்டங்களைக் கூறிக்கொண்டிராதே. இதுவல்ல அதற்குச் சமயம். உனக்குத் தெரிந்த இலட்சியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிராதே, அது வீண் வேலை; உற்பத்தி பெருக வேண்டும் என்ற முக்கியமான நோக்கத்துடன், பாடு படு, உன் முழுத் திறமையைக் காட்டு, உள்ளவோடு உழை; இந்தக் காரியத்தை நீ வெற்றிகரமாகச் செய்து முடித்தால், உற்பத்தி பெருகினால், நாட்டு மக்களின் கஷ்டமும், உன் கஷ்டமும் ஒழிந்துபோகும்" என்று கூறுகிறார்கள்.

நாற்பது வேலி நிலமும் ஓரிரவில், பயிரிடப்பட வேண்டும் என்ற காரியசாத்தியமற்ற திட்டத்தைத் தீட்சிதர் கூறியதுபோலவே, தொழிலாளர்களிடம், உற்பத்தியைப் பெருகச் செய்தாகவேண்டும், என்று கூறப்படுகிறது.

எந்த முதலாளித்வ முறையின் கேட்டினால் தொழிலாளி துயருற்று, உழைக்கும் சக்தியும் தொழில்தரமும் வாழ்க்கைத்தரமும் கெட்டுக் கிடக்கிறானோ, அதே முதலாளித்வ முறை, அதே தொழிலாளியைப் பார்த்து, களைத்துக் கீழே விழாதே—கண்ணீரைக் காட்டாதே—இலட்சியம் பேசாதே—உழைத்து உற்பத்தியைப் பெருக்கு—உறங்காதே! விழி! எழு! உழை!—என்று கட்டளையிடுகிறது. உழைத்து உழைத்து உருக்குலைந்து போய், ஓயாமல் உழைத்தும் உருவான பலன் தனக்கு ஏதும் கிடைக்காததால், உள்ளம் நொந்து போய், தன் உழைப்பின் பயனை உண்டு கொழுத்திடுபவர்கள் உல்லாசபுரியிலே உலவக் கண்டு மனம் வெந்து போய், இந்த நிலை மாறாதா, இதற்கோர் பரிகாரம் கிடைக்காதா, புது வாழ்வு பிறக்காதா அதற்கான இலட்சியத் திட்டம் துவக்கப்படமாட்டாதா என்று ஏக்கத்துடன், கேட்கும் தொழிலாளியைப்பார்த்து, முதலாளித்வம், கூறுகிறது, உழைக்க வேண்டும்! மேலும் மேலும் உழைக்கவேண்டும்! பொருளை உற்பத்தி செய்து மலை மலையாகக் குவிக்கவேண்டும்! அதுதான் இன்று செய்யப்பட வேண்டிய கடமை!—என்று உபதேசம் செய்கிறது, உழைப்பாளியை உருக்குலைத்து வரும் முதலாளித்வம்.

பாட்டாளியின் வாழ்வு எவ்வளவு இருண்டு கிடக்கிறது, என்பது பற்றிக் கவலையற்று, அவனுடைய கண்ணீரைக் காண மறுத்து, இந்த நொந்த உள்ளத்தினால் எப்படி மேலும் மேலும் பாடுபட முடியும் என்பதுபற்றிய எண்ணம் கொள்ள மறுத்து, இரக்கமற்றுக் கூறுகிறார்கள், உற்பத்தியைப் பெருக்கு, அதுதான் உத்தமர் கடமை என்று. பாட்டாளியின் பாடுபடும் திறமை, அவனுக்குக் கிடைக்கும் வாழ்க்கை வசதியைப் பொறுத்ததல்லவா? துரு ஏறிய கத்திபோல், பழுது பார்க்கப்படாத கலம்போல், தொழிலாளியின் திறமை, இன்று இருக்கிறதல்லவா? கத்தி சாணை தீட்டப்பட்டு, கலம் பழுது சரிபார்க்கப்பட்டு பிறகுதான் காரியத்துக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்பது போலத் தானே வறுமையால், வாழ்வு நொறுங்கி, அதன் விளைவாகத் திறமும் குன்றிப் போயுள்ள தொழிலாளிக்கு, வாழ்வை நொறுக்கும் அளவு உள்ள வறுமை நீக்கப்பட்டால் மட்டுமே, திறமை வளர முடியும், திறமை வளர்ந்தால் மட்டுமே, உற்பத்தி பெருகமுடியும், அவனுடைய வாழ்விலே துளியும் வளம் இன்று இல்லாததற்கு எது காரணமோ, அந்தக் கேடு களைந்தால்தானே, அவன் நிம்மதி பெறமுடியும்! அந்தக் கேடுதானே முதலாளித்வ முறை!—என்பதை மறைத்துவிட்டு, பாட்டாளியைப் பார்த்து, உழைத்து அலுத்துப் போயிருக்கும் ஓட்டாண்டியைப் பார்த்து, தொழில் திறமையும் குன்றிப் போயுள்ள நடமாடும் வறுமையைப் பார்த்து, உழைத்து உற்பத்தியைப் பெருக்கு! திறத்தோடு வேலை செய்! பொருளை மலை மலையாகச் செய்து குவி!—என்று கட்டளையிடுகிறார்களே, இவர்களின் கன்னெஞ்சத்தை என்னென்பது.

பாட்டாளியின் வறுமைக்குக் காரணம், அவன் உழைத்து உருவாக்கும் பலனை, அவன் அடைய ஒட்டாதபடி தடுத்து, இடையே உள்ளவர்கள், தமதாக்கிக் கொள்கிறார்கள், அந்த முதலாளித்வந்தான், மூலகாரணம், பாட்டாளியின் வாழ்வு பாழாவதற்கு, என்ற அடிப்படைத் தத்துவத்தை, அறிஞர் உலகு பன்னெடுநாட்களுக்கு முன்பே ஏற்றுக்கொண்ட தத்துவத்தை, ஆயிரமாயிரம் மேடையிலே, இதே காங்கிரஸ் தலைவர்கள், அடிவயிறு வலிக்க வலிக்க எடுத்துப் பேசிய தத்துவத்தை, இன்று தூக்கி மூலையில் வீசிவிட்டு, தொழிலாளருக்குள்ள துயருக்குக் காரணம் வறுமை—அந்த வறுமைக்குக் காரணம், பொருள் உற்பத்தி பெருகாதது, எனவே தொழிலாளியின் துயரம் போகவேண்டுமானால் பொருள் உற்பத்தி பெருகவேண்டும், அதற்காகத் தொழிலாளி முன்பு

காங்கிரஸ் தலைவர்களின் சர்ச்சிலிசம்

உழைத்ததை விட மும்முரமாக, திறமையுடன் இனி உழைக்கவேண்டும் என்று புதிய நியாயம் பேசப்படுகிறது — தீட்சிதர்குரல் தொனிக்கிறது!!

நாற்பது வேலி நிலத்தையும் ஓரிரவில் உழுதுபயிரிட்டுக் காட்டச் சிவகணங்கள் வந்தன என்று கதைகூறினர் — இப்போது, பாட்டாளிக்கு, எந்தக்கணங்களும் உதவிக்கு வராது என்பதை, புராணம் பேசுபவரே கூடக் கூறித்தானாகவேண்டும். இந்நிலையில், உற்பத்தியைப் பெருக்குவது, எப்படிச் சாத்யமாகும்? அதற்கு ஏற்ற சக்தியும் திறமையும், சிதைக்கப்பட்டுப் போயுள்ள நிலையில் உள்ள பாட்டாளிகளிடம், இந்தப் பயனற்ற, அர்த்தமற்ற, ஆணவம் கலந்த திட்டத்தைப் பேசுவதற்கு, எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்திருக்கவேண்டும், இலாபவேட்டைக்காரர்களுக்கு.

இதுவரையில் ஏதோ, பாட்டாளிகள் சூதாகநடந்து கொண்டு, உழைக்காது ஏமாற்றிக்கொண்டு திரிந்து வந்தது போலவும், அதனாலே, காருண்யமிகுந்த முதலாளிமார்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு, பொது மக்களின் நலனையே குறிக்கோளாகக்கொண்டு அமைத்துள்ள தொழிற்சாலைகளிலே, உற்பத்தி குறைந்துவிட்டது போலவும், அவ்விதம் உற்பத்தி குறைந்ததால் தான், தொழிலாளிக்கும் பொதுமக்களுக்கும், சங்கடமும் சஞ்சலமும் ஏற்பட்டது போலவும், இதற்கெல்லாம் சர்வரோக நிவாரணி உற்பத்திபெருகுவது தான் என்பது, உலக அறிஞர்கள், கண்டறிந்த முடிவு என்பது போலவும் பேசுகிறார்கள். எவ்வளவு நன்றியற்ற நெஞ்சினராக இருந்தால் தொழிலாளர்மீது இந்தப்பழியைச் சுமத்த மனம் இடந் தந்திருக்கும். பார்க்குமிட மெங்கும், உபயோகப்படுத்தும் பொருள்களிலே எல்லாம், பாட்டாளி சோம்பிக்கிடந்தான், முழுத்திறமையை உபயோகிக்காமல் இருந்தான், என்ற முத்திரையா, தெரிகிறது. கருத்துக்குருடர் கூடக் கூறாரே. உழைத்து உற்பத்தியைப் பெருக்காத குற்றத்தைப் பாட்டாளிகள்மீது செலுத்துகிறார்கள்—யாரார் அறிவாரா, பாட்டாளிகளின் உழைப்பு, ஆடையாகமாறி, ஆஸ்திரேலியாவுக்குச் சென்று, ஆலை அரசர்களுக்கு இலாபம், தந்திருக்கிற உண்மையை! வட்டமிடும் விமானம், பாட்டாளியின் திறமைக்குறைவையும் சோம்பற் குணத்தையும் காட்டுகிறதா? ஓடும் ரயில் உரைப்பது, இதனையா? பாடும்பெட்டியும், வீடும் வாசலும், விதவிதமான ஆடையும், விருந்துக்குரிய பண்டங்களும் மருந்து வகைகளும், பாட்டாளியின் திறமைக் குறைவுக்கும், சோம்பற் குணத்துக்கு ஆதாரப்பத்திரங்கள் போலும்! இதற்கான தொழிற்சாலைகளைக்கட்டி ஆளும் குட்டிக் குபேரர்களின் இரும்புப்பெட்டியும், அதனை வைத்திடக் கள்ளஅறை உள்ள மாளிகைகளும், முதலாளிமார்களின் கஷ்டநஷ்டத்தின், அடையாளப் பத்திரங்கள் போலும்! பாட்டாளியின் குடிசையும், அரைநிர்வாணக் கோலமும், அங்கம் பசியால் துடித்திடும் நிலையும், சோம்பேறிக் குணத்துக்காக, இந்த சற்புருஷர்கள், ஆண்டவன் பெயரால் அளிக்கும் தண்டனை போலும்! எவ்வளவு துணிவு பிறந்துவிட்டது! ஏமாளியும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தைக்கூறி, ஏழையின் வயிற்றில் அடிக்கும் தந்திரம், எவ்வளவு விரைவாகப் பரவுகிறது என்பதை எண்ணும்போதே, மனம் மருளுகிறது.

பட்டினி கிடந்தாலும், பொது உடைமைக்காரர் வலையில்சிக்காதே.

பஞ்சம் தலைவிரித்தாடினாலும், சமதர்மியின் சாகசத்தை, நம்பாதே.

அடிமையாக நடத்தப்பட்டாலும், மனிதனை மனிதனாக மதி என்று கூறும் தன்மானக்காரரின் சொல்லைக் கேளாதே.

உழை! உழை! உழைத்துக் கொண்டே இரு! உன்நிலை மறந்து வேலைசெய்! உற்பத்தி பெருகவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வேலை செய்! ஏடுகளைக்காட்டுவர், ஏறெடுத்தும் பாராதே. இலட்சியங்களைத் தீட்டுவர், காது கொடுத்துக் கேளாதே! உன் குடும்பம் கதறும், கண்ணால் பாராதே! கடமையைச் செய்! உற்பத்தியைப் பெருக்கு, பொருளை மலை மலையாகச் செய்து குவி — என்று பேசப்படுகிறது. ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மிகமிகத் தைரியத்துடன்— தைரியமா? அல்ல! ஆணவத்துடன்- சர்ச்சில் துரைமட்டுமே பேசமுடிந்த விஷயங்களை இன்று, மிகமிகத் தைரியமாக, கோழைகளும் பேசும் அளவுக்கு, நாட்டிலே, நிலைமை ஏற்பட்டுவிட்டது. சமதர்மம், கேலிக்குரிய இலட்சியமாக்கப்படுகிறது. முதலாளிகளின் மீது கோபப்படுவது, முதல்தரமான தேசத் துரோகம் என்று பேசப்படுகிறது. இலாபத்தைப் பெறும் நோக்கம், உயர்ந்தோர் லட்சியம், உத்தமர்களின் உள்ளத்திலே உலவும் உயர்ந்த இலட்சியம், மக்கள் போற்றி வளர்க்கவேண்டிய, பாராட்டவேண்டிய பொன்னான இலட்சியம்என்று கூடப்பேசப்படுகிறது. எவ்வளவு விரைவிலே, புலிக்குப் பூஜையும், ஆட்டுக்கு அபராதமும், ஏற்பட்டுவிட்டது! எந்தக் கட்சியில் இருந்தால்தான் என்ன, ஏன் முற்போக்கை விரும்பும் வாலிபர்கள், இந்தச் சூழ்நிலையை அறிந்து கொள்ளக்கூடாது!

இந்தியப் பார்லிமெண்டில், நிதி மந்திரி, பச்சையாகவே பேசுகிறார், இலாபம் கிடைக்கும் என்ற ஆசையைக் கிளறிவிட்டால்தான், பணம் படைத்தவர்கள், தொழிலில் பணத்தைப் போட முன்வருவார்கள், என்று. முதலாளிகளோ, இலாப நோக்கம் பழிக்கப்படாமல் இருந்தால் மட்டும் போதாது, இலாபத்தைக் குறைக்கக் கூடிய வரிவகைகளும், கட்டுத்திட்டங்களும் கூட இருக்கலாகாது — அப்போதுதான் தொழில் வளரும் என்று பேசுகிறார்கள். இருபதாண்டுகளுக்கு, இன்றுள்ள நிலைமை, மாற்றப்படாமலிருக்கவேண்டும், இலட்சியம் பேசுவோர் ஒடுக்கப்படவேண்டும், அப்போதுதான் பொருள் உற்பத்தி பெருகும் என்று, முதலாளிகள் மிரட்டும் குரலுடன் பேசுகின்றனர். பயந்து பதுங்கி கிடந்த சிறுத்தை, வேட்டைக்காரனைப் பார்த்துக் கட்டளையிடுகிறது, ஓட்டிவா, மான் கூட்டத்தை, என் இருப்பிடத்துக்கு, உனக்கு மானின் தோல் கிடைக்கும், நீ பிறகு, அதனைத்தவசிகளுக்கு ஆசனமாக்கலாம், அவர்கள் அதன் மீதமர்ந்து ஆண்டவனை நோக்கித் தவம்செய்வர், ஆண்டவன் அவர்களுக்குவரம் அளிப்பார், அப்போது [illegible] இரத்தம் குடிக்

மான்கூட்டத்தை ஓட்டிவரும் வேட்டைக்காரர்

கும் கொடுமையும், ஒழிந்துபோகும், அன்பு நிலவும், என்று கூறுகிறது. வேட்டைக்காரனும், அம்புகளை, மான் கூட்டத்தின் பக்கம் ஏவத் துணிகிறான்.

காட்டிலும் நடைபெற முடியாத இந்தக் காட்சியை ஒத்தது, நாட்டிலே இன்று நடைபெறுகிறது.

தொழிலாளரின் நடவடிக்கையையும் நோக்கத்தையும், திறமையையும் இலட்சியத்தையும், முதலாளிகளுடன் கூடிக்கொண்டும், முதலாளிகளைவிட, அதிகமான கோபத்துடனும், நாடாளும் காங்கிரஸ் தலைவர்கள், கண்டிக்கின்றனர். தொழிலாளர்களின் முயற்சிகளை, வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம் என்ற ஆசையுடன் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை, முறியடிக்கத் தங்கள் முழு பலத்தையும் உபயோகிக்க முன்வருகிறார்கள். முதலாளித்வ முறை, தொழிலாளர்களின் உரிமை வேட்கைக் கிளர்ச்சியின் காரணமாக முறிந்துவிடக் கூடுமோ என்ற அச்சம், முதலாளிகள் மனதிலேயே தோன்றும்போது, இந்தத் தலைவர்கள், வலிய வலிய முன்வந்து, அபயம் அளித்து, "அஞ்சாதீர் இலாபம்தேடும் இலட்சியவாதிகாள்! பாட்டாளிகளைப் பாதிவாழ்வினராக்கும் பரோபகாரக் காரியம் புரியும் பண்புடையோரே! முதலாளித்வ முறை முறிந்தால், பொருள்உற்பத்தி குறையும், அது கூடாது, ஆகவே நாங்கள், உற்பத்தியைக் கெடுக்கும் எந்தத் திட்டத்தையும் வெற்றி பெறவிடமாட்டோம், அஞ்சேல்!— என்று கூறுகிறார்கள். ஒரு புறத்திலே தொழிலாளர் தரும் தொல்லை, மற்றோர் புறமோ, மார்க்கட் நிலவரத்தால் ஏற்படும் தொந்தரவு, இதற்கிடையே, சர்க்கார், சமதர்ம இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், நாம் கஷ்டப்பட்டு, கட்டிக் காத்து, ஊட்டி வளர்த்து, உருவாக்கும் தொழிற்சாலைகளை, சர்க்கார் உடைமையாக்கிக் கொள்வதாக ஒரு மிரட்டல் வேறு இருக்கிறதே, இந்த இன்னலையும் சகித்துக்கொள்ள முடியுமா, என்று முதலாளிகள் சஞ்சலப்படுகிறபோது, சர்க்காரும், சர்க்காரை அமைத்துள்ள ஏழை பங்காளர் கட்சியும், "அவ்விதம் எண்ணிக் கொண்டு, ஆயாசப்படாதீர், ஐயன்மீர்! சமதர்மம் சிறந்த இலட்சியம்! இலட்சியங்களே பொதுவாகச், சுவையுள்ளன! ஆனால், சுவையுள்ள திட்டங்கள், என்பதற்காக, நாங்கள் அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வரமாட்டோம். காலதேச வர்த்தமானம், என்பதைக் கவனித்தே நடந்து கொள்வோம். இப்போது நடைபெற்றுக்கொண்டுள்ள, தனிப்பட்டவர்களின் தொழில்களை சர்க்கார், கைப்பற்றிக் கொள்ளாது, பயம் வேண்டாம், என்று தைரியம் கூறுகிறார்கள்.

வெட்கமின்றிவெளிப்படையாகவே அந்தத் தலைவர்கள், தொழில்களை, சமதர்மத் திட்டத்தின்படி சர்க்காரின் பொதுச் சொத்தாக்குவதற்கு ஏற்ற சக்தியும் திறமையும், சர்க்காரிடம் இல்லை, என்றே பேசுகிறார்கள்.

கூலிக்கு வராவிட்டால், பயல் கும்பி கழுவ என்ன செய்வான்!— என்ற ஆணவத்துடன் கேட்டுவிட்டுச் சிரிக்கும் மிக மிக மட்டரகமான புணந்தாக்கியின் பாஷையிலே பேசுகிறார்கள், பாரதத் திருநாட்டிலே, ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லாதபடி செய்யும் இலட்சியத்தைப் பேசிப் பேசி, ஓட்டு வேட்டை ஆடிய உத்தமர்கள்.

'இருபது ஆண்டுகள் இந்தியாவை முதலாளித்வ முறையினருக்குக் குத்தகை விடவேண்டும் என்று இன்று கூறப்படும் யோசனை மிகவிரைவில், கட்டளையாக மாறிவிடும். இந்நாட்டு முதலாளிகள், இப்போது, பத்திரிகை உலகில் எந்த அளவு ஆதிக்கம் வகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது, எல்லோருக்கும் தெரியும். பண்டித ஜவஹரே, இந்நிலைமையைக் குறித்துப் பேசியிருக்கிறார். இந்த ஏடுகள், சும்மா இருக்குமா! சமதர்மம், என்பதே ஒரு பைத்யக்காரத் திட்டம் என்று எழுதும், துணிந்து —ஏனெனில் அந்த ஏடுகளிலே பேனா வேலைசெய்யும் கண்ணியவான்களுக்கு நன்றாகத் தெரியும், பெரும்பாலான வீடுகளிலே, பத்திரிகை, பழைய பஞ்சாங்கத்துடன் சேர்த்து, பிள்ளையார்மாடத்தில்! விபூதிமடலுக்கருகே, வைக்கப்பட்டிருக்கும் நிலையும், அந்த நிலை உண்டாக்கும் மனப் பான்மையும். ஆண்டுதோறும், விசித்திரமானரூபத்தில், சங்கராந்தி புருஷன் வருவான், என்று பஞ்சாங்கத்தில் எழுதப்பட்டிருப்பதை, நம்பும், மக்கள்தானே, பத்திரிகையைப் படிக்கப்போகிறார்கள், அவர்களிடம் மிக எளிதாக, சமதர்மம் சத்தற்ற திட்டம் என்று கூறி நம்பும்படி செய்துவிடமுடியும், என்பது, ஏடுகளிலே, எழுத்துவேலை செய்யும் கண்ணியர்களுக்குத் தெரியும். கம்யூனிஸ்டு ஜீவா, காங்கிரஸ் அபேதவாதியாக இருந்த காலத்தில், 'தினசரி' சொக்கலிங்கம், 'தினமணி' ஆசிரியராக இருந்தார். அப்போதே அவர், 'அபேதவாதத்தை' துளியும் கூச்சமின்றிக் கேலிக்குரிய பதமாக்கி உபயோகித்தார், ராமன், கிருஷ்ணனுடைய பாக்கெட்டிலிருந்து பத்து ரூபாயை அபேதவாதம் செய்துவிட்டான்—என்ற முறையிலே, எழுதி, அபேதவாத என்ற தத்துவத்தைக் கேவலப்படுத்திக் காட்டினார். அவர் காட்டிய பாதையிலே, செல்ல, எத்தனையோ 'முன்னுக்கு வரவேண்டிய இளம் எழுத்தாளர்கள்' தயாராக உள்ளனர். அவர்கள், தங்கள் முழுச் சாமர்த்தியத்தையும் உபயோகித்து, சமதர்மம் என்ற கொள்கையை, பொதுமக்களே, கேலிக்குரியதாகக்கருதும்படி செய்துவிடுவர். அப்போது முதலாளிகள், கட்டளையே பிறப்பிக்க முன் வருவர். இந்த இருபது ஆண்டுகளிலே, என்னநடைபெறும்? தனிப்பட்டவர்கள், இலாப நோக்கத்துடன், தொழில்களை நடத்துவர். இந்தத் தொழில்களுக்குத் தேவையான, கருவிகள், விஞ்ஞான சாதனங்கள், வெளிநாட்டிலிருந்தே வரவழைக்க வேண்டும் — குறிப்பாக, அமெரிக்காவிலிருந்து. அமெரிக்காவோ, இந்தியா, தொழில் துறையிலே முன்னேற வேண்டுமென்பதிலே மிகமிக அக்கரை கொண்டிருக்கிறது—ஆகவே, தனிப்பட்ட முதலாளிமார்களின் தொழில்களில், அமெரிக்கத் தயவு கலந்துவிடும்— அதாவது அமெரிக்க முதலாளித்வமும், சுதேச முதலாளித்வமும், கூட்டாகித், தொழில்களைநடத்துவர். இருபதாண்டு, இந்தக் 'கூட்டு அறுவடை' நடைபெற்றால், மக்களின், வாழ்வு மலர்த் தோட்டமாகவா இருக்கும்? இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத்தொழில்களைச்சர்க்கார் ஏற்று

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 4—4—48 [ஞாயிறு

காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும்

*

ஓமந்தூரார் வெற்றி பெற்றார் — உண்மை வெற்றி பெற்றது—உறுதிக்கும் ஒழுக்கத்துக்கும் வெற்றி கிடைத்தது — சூதுக்கும் சூழ்ச்சிக்கும் இடமளிக்க மறுத்துவிட்டனர்—ஆட்சி பீடத்தைத் தாதாக்கிக்கொண்டு இலாப வேட்டையில் ஈடுபடத் திட்டமிட்டவர்களின் ஆசையில் மண் விழுந்தது — மக்களாட்சியின் மாண்பினை, உணர்ந்து நடக்கும் உத்தமர்களின் பக்கம் வெற்றி நின்றது.

கள்ளங்கபடமற்ற கிராமவாசி ....அரசியல் சூதாட்டத்துக்கு அப்பாற்பட்டவர் — தியாக முத்திரையை அரசியல் சந்தையிலே, விற்கத் துணியும் வியாபாரியாக இருக்க மறுப்பவர்—சொந்த வாழ்க்கையையும், சுகத்தையும் மிகமிகக் குறைந்த அளவினதாக்கிக்கொண்டு, துறவு மனப்போக்கினர், ஏடுகளுக்குப் பின்புறம் இருந்துகொண்டு நாட்டு நிலையைக் கவனிக்க மறுக்கும் போக்கினராக இல்லாமல், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு, நம்மாலான பணிபுரியும் சந்தர்ப்பம் நமக்குத் தரப்பட்டுள்ள நேரத்தில், நாம் நலம் செய்வதுதான் 'தர்மம்' என்ற நோக்கமுடையவர், ஏர் என்றால் என்ன, என்று கேட்கும் மேனிமினுக்கி வாழ்வினர் போலன்றி, நெடுங்காலமாகக் கிராமங்களின் வாழ்வை நேரடியாக, அவர்களுடன் பழகி மட்டுமல்ல, அவர்களில் ஒருவராகவே இருந்து அறிந்துகொண்டவர், வெள்ளை ஆட்சி போகவேண்டியதற்கான காரணம், சொந்தஆட்சி தேவை என்ற ஆவேச இலட்சியம் மட்டுமல்ல, நல்ல ஆட்சிதேவை என்ற அடிப்படை நியாயமே, என்ற நன்னெறியை உணர்ந்தவர், உள்ளொன்று வெளியொன்றுகொண்டுழலும் உலுத்தர் போலன்றி, ஊருக்கு உழைப்பேன், அதனால் வந்துறும் இன்னலைப் பொறுப்பேன், என்ற உறுதிபடைத்த உள்ளத்தினர், எளிய வாழ்க்கையும், சீரிய குணங்களும் கொண்டவர், இவரே நமது முதலமைச்சர் என்று சொன்னாலொழிய, யாராலும், அவ்வளவு பெரிய பதவியில் அமர்ந்திருப்பவர், என்று கண்டதும் உணரக்கூடிய விதமான, உருவமோ, உடையோ, நடையோ கொண்டவரல்ல, தன்னடக்கமுள்ள தமிழர், ஓமாந்தூரார்.

தென் ஆற்காடு மாவட்டத்திலே, மிகச்சிறிய கிராமம், ஓமந்தூர். கிராமத்தைத் தொட்டும் தொடாமலும் இருக்கும் சிறியதோர் வயல் சூழ்ந்த தோட்டம். பயன்தரும் மரவகைகள், பச்சைப் பயிர் வகை, பழந்தரும் செடிகள், படரும் கொடிகள், இவைகளுக்கிடையே ஓர் வீடு — அதிலே பன்னெடுங்காலம் தங்கி, சந்தடி, ஆர்ப்பாட்டம், இவைகளைக் கேட்கவும் காணவும் அவசியமில்லாத இடத்தில் வாழ்ந்து, தூய்மையையும் வாய்மையையும் உள்ளத்தில் பயிரிட்டுக் கொண்டிருந்தவர், ஓமந்தூரார். அவருக்கு ஆறு குமாரர்கள், அவர்களுக்கு இன்னின்ன வேலை தேடிக் கொடுத்தார், மருமகனை மைசூர் சமஸ்தானத்திலே, பெரிய வேலையில் அமர்த்தினார், மைத்துனனுக்கு மைக்கா சுரங்க உரிமையைத் தந்தார், சம்பந்தி வீட்டாருக்குச் சர்க்கார் காரியாலயத்திலே வேலை தேடிக் கொடுத்தார், என்றுவதந்திகள் கூறுவதற்குரிய நிலையும் நடவடிக்கையுமே சர்வசாதாரணமாக, நாடாளும் வாய்ப்புப் பெற்றவர்களிலே பெரும்பாலோருக்கு இருக்கும். ஓமந்தூரார், இத்தகைய சூழ்நிலையில்சிக்கினவரல்ல. முரட்டுச் சுபாவம், வாக்குத் தவறுவதில் வல்லுநர், நோக்கத்தை மறைப்பதில் நிபுணர், என்றெல்லாம், பழித்துப் பேசப்படுவர், பல அரசியல் தலைவர்கள்—ஆனால், பகைவனும் இவர் மீது இப்படிப்பழி சுமத்த முடியாது. காங்கிரசின் தியாகத்தீயிலே விழாமறுத்துவிட்டு, வெள்ளை ஆட்சியின்போது, சுயநல வேட்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்துவிட்டு, சமயம் கிடைத்த உடனே, பதவிக்காகப் பல்லிளித்த பலர் போலின்றி, காங்கிரசின் தொண்டராக இருந்து, தியாகத் தீயிலே குளித்து வெளிவந்தவர். அவர் அமெரிக்கா சென்றதில்லை, ஆங்கில நூல் நிலையங்களில் ஆண்டுகளை செலவிட்டதில்லை, அதிகாரிகளுடன் நிலாச்சோறு உண்டுகொண்டிருந்ததில்லை, கட்டைவெட்டும் கந்தன், மாடோட்டும் முனியன், தோட்டக்கார துரைசாமி, வயலில் வேலை செய்யும் வரதன், இப்படிப்பட்ட, பாடுபடும் மக்களோடு பெரிதும் பழகியவர்.

இப்படிப்பட்ட ஓமந்தூராருக்குத்தான், போட்டி ஏற்பட்டது—இவருடைய பீடத்தைக் கவிழ்க்கத்தான் புயல் வீசிற்று — இவரை ஒழித்துக் கட்டத்தான் முஸ்தீபுகள் பலமாக நடைபெற்றன! இவர் வெற்றி பெற்றார் — 112 ஓட்டுகள் பெற்றார்—படை திரட்டிய பிரகாசம் தோற்றார், எண்பத்திநாலே ஓட்டுகள் பெற்றார்—களிப்படைகிறோம், பெருமைப்படுகிறோம், பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம், என்று, அவருடைய நண்பர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களில் பெரும்பாலோர், கூறி மகிழ்வதைக் காண்கிறோம்—ஆனால் நமக்கோ, இந்த வெற்றி, களிப்பைத் தருவதைவிட பயத்தை, ஊட்டுவதாகவே இருக்கிறது. ஏன்? ஓமந்தூராருக்கு வெற்றிதான், என்ற களிப்பிலே ஈடுபட்டு, உண்மையை மறந்துவிட மறுக்கிறோம். உண்மை என்ன? அப்படிப்பட்ட நல்லவருக்கு 'எதிர்ப்பு' ஏற்பட்டு, அவ்வளவு தன்னலமற்றவரைத் தாக்கச்சதி நடைபெற்றதே, அதனை எண்ணும்போது எவ்வளவு 'பொல்லாதவர்கள்' நாட்டிலே நடமாடிக் கொண்டுள்ளனர், என்பதல்லவா தெரிகிறது—அது நமக்குத் திகிலையும் கவலையையுமே உள்ளபடி தருகிறது.

யாரை, சகல கட்சியினரும், நல்லவர், தன்னலமற்றவர், என்று புகழ்கிறார்களோ, யாருடைய முன்னாள் நடவடிக்கையும் இந்நாள் போக்கும், துளியும் சுயநலமற்றதாக இருக்கிறதோ அவருக்கு, எதிர்ப்பு ஏற்பட்டதென்றால், அந்த எதிர்ப்பை அவர் தோற்கடித்ததிலே ஏற்படும் மகிழ்ச்சியை விட, எதிர்ப்பு ஏற்பட முடிந்ததே அந்த நிலையையே கவனிக்கவும், கவலை கொள்ளவும் தோன்றுகிறது. மந்திரிசபையைக் கவிழ்க்கச் சதிசெய்தவர்களெல்லாம், மண் கவ்வினர், என்று மகிழ மட்டும், பலருக்குத் தோன்றும், நமக்கோ, மாண்புடையவர் என்று மக்களால் மதிக்கப் படுபவருக்கு எதிரிடையாகச் சதி நடந்ததே, அதுவே துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் உரியதாகத் தோன்றுகிறது.

கெட்டவாடை அடிக்கிறது என்றனர், கேடுகெட்ட புத்தியினர்—நாசியுள்ளோர் முகர்ந்துபார்த்துக் கூறட்டும், மல்லிகை மணமுள்ள மலர்தானா, அல்லவா என்பதனை என்று எவரேனும் கூறி, ஒருவர் மல்லிகையை முகர்ந்து பார்த்து, செச்சே! யாரப்பா, வீண்பழி சுமத்தினவன் மல்லிகை மணமாகத்தான் இருக்கிறது, என்று கூறினால், மகிழ்ச்சிக்குரிய சம்பவமாக, நாம் அதனைக் கூறமாட்டோம்—மல்லிகையின் மணத்தைச் சந்தேகிக்கும் அளவு மந்த மதியிருப்பதையும், அதனைச் சாதகமாக்கிக் கொண்டு, மல்லிகையைப் பழிக்குமளவு, சூது செய்யும வஞ்சகர்கள் இருப்பதையும், எண்ணியே ஏங்குவோம். அது போலத்தான், ஓமந்தூரார் பெற்ற வெற்றி, நமக்கு, மகிழ்ச்சி பெறுவதற்குச் சந்தர்ப்பமாகப்படுவதைவிட அதிக அளவுக்கு, இந்த நாட்டிலே மிக மிக நல்லவர்களுக்கு எதிராகச் சதி செய்யும் பொல்லாதவர்கள், இருக்கிறார்களே, என்பதைத் தெரிந்து கொள்ளவும், அதனால் உள்ளம் துடி துடிக்கவுமான, சம்பவமாகத் தோன்றுகிறது.

போட்டி—தேர்தல்—இவை சகஜந்தானே! ஜனநாயக இலட்சணமே போட்டிதானே, இது கண்டு நீ ஏன் வீணாகப் பதறுகிறாய், ஏதேதோ கூறிக் கதறுகிறாய், என்று கேட்பர் சிலர்.

குடிஅரசுக் கோட்பாட்டின்படி, ஒரு அரசியல் கட்சிக்கும், மற்றோர் அரசியல் கட்சிக்கும் போட்டி ஏற்படுவது முறைதான்—அதுதேவையுங்கூட. ஆனால் ஓமந்தூராருக்குப் போட்டி, சொந்தக் கட்சியிலே முளைத்தது!!

இதுவும் சாதாரண சம்பவந்தான் என்பார் உண்டு. சொந்த இயல்பு சோடையாக இருக்கும் ஒருவருக்கு, சொந்தக்கட்சியிலே, போட்டி ஏற்பட்டால், அது சாதாரண சம்பவமாக மட்டுமல்ல, காரணத்தோடு கூடிய சம்பவமாகக் கூடக் கருதலாம் ஆனால் ஓமந்தூராரை மாசிலாமணி, என்று கூறினர்—விழியில் பழுதுள்ளவருங்கூட அவரிடம் வஞ்சனையோ சுயநலமோ இருப்பதாகக் குற்றம் சாட்டவில்லை—அப்படிப்பட்டவருக்கு எப்படிப் போட்டி ஏற்படலாம்? அந்தப் போட்டியை, எப்படி, சர்வசாதாரணச் சம்பவம், என்று கூறிவிட முடியும்?

அவர் நல்லவராக இருக்கலாம், சுயநலமற்றவராக இருக்கலாம், அவருடைய கொள்கைகளும் திட்டங்களும், அவருக்குச் சரியானவை என்று அவர் மனதுக்குப் பட்டிருக்கக் கூடும்; ஆனால் அதனாலேயே, வேறு திட்டங்களைக் கொண்டவர்களுக்கு இடமளிக்கக் கூடாது என்று பொருளோ, என்று வாதாடி, ஓமந்தூரார் இன்ன திட்டத்தைப் புகுத்துகிறார், அது சரியில்லை, இதோ எமது திட்டம், இதுவே நாட்டுக்கு ஏற்றது, காலத்துக்கு உகந்தது, கலைக்கு உதவக்கூடியது, என்று மாற்றுத் திட்டத்தைக் கூறி, இந்தப் போட்டி நடத்தப்பட்டதா, என்றால் இல்லை!! ஓமந்தூரார் தலைவராக இருப்பதா, பிரகாசம் அந்தப் பீடத்தில் இருப்பதா, என்பதுதான் போட்டியிலே பிரச்னையாக இருந்ததேயொழிய, ஓமந்தூரார் திட்டத்துக்கும் பிரகாசம் திட்டத்துக்கும் போட்டி என்ற முறையிலே பிரச்னை இல்லை.

இங்குதான், சூட்சமம் இருக்கிறது—வெற்றிக் களிப்பிலே, பலர் இதனை மறந்திருப்பர்,—வேதனையை ஏன் கிளறுவது என்பதற்காக, பலர் மறைத்திருப்பர்—உள்ளம் வெளியே தெரிந்துவிடப் போகிறது என்பதற்காகச் சிலர், இதனை மறுத்தும் உரைப்பர்—ஆனால் ஆர அமர யோசிக்கும் எந்த நேர்மையாளரும் இந்தச் சூட்சமத்தைத் துச்சமெனக் கருதிவிட மாட்டார், என்பது திண்ணம்.

நாடாளும் கட்சியிலே நல்லவர் என்று நாட்டுமக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு தலைவருக்கு, காரணமின்றி—வெளியே பகிரங்கமாகக் காரணம் ஏதும் கூறப்படாத நிலையில்— போட்டி ஏற்பட்டிருக்கிறது. அவருடைய குணம் கண்டிக்கப்படவில்லை, அவருடைய திட்டம் தாக்கப்படவில்லை, மாற்றுத் திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை. என்றாலும், அவருக்குப் போட்டி—போட்டியா அது—பூசல்!—பூசலும் சாதாரணமாகவா, ஏசல் பாணங்களைச் சரமாரியாக ஏவின நிலையில் பூசல்—சதியேகூட—நடைபெற்றிருக்கிறது. ஏன்? இருதரப்பினரும், கூசுகின்றனர் கூற, ஆனால் இருதரப்பினரின் மனமும் குமுறுகிறது! இவ்வளவு வேதனைக்கிடையிலேயும் இந்த வேடிக்கை தெளிவாகவே புலனாகிறது.

"ஏனய்யா ஓமந்தூரார் கூடாது என்று கூறுகிறீர்?"

"அவர்—அவர்........" இப்படி இழுக்கிறார் எதிர்ப்பாளர்.

"என்னதான் காரணம் இந்த எதிர்ப்புக்கு?" என்று விடாப்பிடியாகக்கேட்டால் தடுமாற்றத்துடனே தான் பேசுகிறார் எதிர்ப்பாளர், "அவர்—அவர்நல்லவர்—தங்கமானவர்—நாணயஸ்தர்—அவர்மீது ஒரு குறையும் இல்லை........ஆனால்........" என்று, எதையோ மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், அவஸ்தைப்படுகிறார்.

அவருக்கு ஆங்கிலம் தெரியாது, என்று ஆங்கிலத்தைப்புரிந்து கொள்ளாத நிலையிலே உள்ளவர்கள் கூடக் கூறினர்—அது ஒருகாரணமாகாது.

இது போன்ற அர்த்தமற்ற எதையோ கூறினரேயொழிய, உண்மையைக்கூற, அவர்களுக்கு நெஞ்சுரம் இல்லை! ஏன்? உண்மையைக் கூறினால், ஊராரின் கண்கள் திறந்துவிடும்—அப்போது உளுத்தரின் சூது நன்றாகத் தெரிந்துவிடும் என்ற அச்சம் எதிர்ப்பாளர்களைப் பிடித்துக் கொண்டது.

ஆச்சாரியாருக்கு முன்பு எதிர்ப்பு ஏற்பட்டது — அவர் ஆகஸ்ட்டுத் துரோகி—ஆணவச்சுபாவக்காரர்—என்று காரணங்கள், பொதுமேடைகளிலேயே எடுத்துக்கூறப்பட்டன, காமராஜ் போன்றவர்களால்.

ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது, அவர், விஞ்ஞானத்தொழில் முறையை ஒழித்துவிடும் நோக்குடன், மில்ஒழிப்புதிட்டம்கொண்டு வருகிறார் என்று காரணம், கூறப்பட்டது.

அதுபோல, ஓமந்தூராருக்கு ஏற்பட்ட போட்டியின்போது, என்ன காரணம் கூறப்பட்டது? வெற்றிக் களிப்பு அடைந்தவர்கள், தோல்வியால் துவண்டவர்கள், ஆகிய இருதரப்பினருமே, இந்தக் காரணத்தை நாட்டு மக்களுக்குக் கூறவில்லை. இந்தப் போட்டி, மக்கள் பொதுமன்றத்திலே நடைபெற்றிருந்தால், ஓரளவுக்காவது, இந்தக்காரணம் என்று என்பதை மக்கள் தெரிந்து கொண்டிருக்க முடியும். போட்டியோ, தாளிட்ட கதவுக்குப்பின்புறம், மண்டபத்துக்குள்ளே இரு பட்டவரிசை மட்டுமே தங்கியிருந்த முகாமில்,

நடைபெற்றது. முடிவு மட்டுமே மக்களுக்கு அறிவிக்கப் பட்டது—உள்ளே நடைபெற்ற "விவாதம்" மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஏன்? தெரிவித்திருந்தால், பிரச்னை, வேறு உருவாகி விட்டிருக்கும். போட்டி, ஓமாந்தூராருக்கும் பிரகாசம்காருவுக்கு மிடையே அல்ல—இருவரும், இரு விதமான 'சக்திகளின்' பிரதிநிதிகளாக இருந்து, போர் நடைபெற்றது, என்ற சூட்சமம், வெட்டவெளிச்சமாகி விட்டிருக்கும். சூட்சமத்தை, மிகமிகச் சாமர்த்தியமாகவே, மறைத்துப் பார்த்தனர். ஆனால் அதிலே முழு வெற்றி கிடைக்கவில்லை. சூட்சமத்தை மக்கள் சற்றுப்புரிந்து கொண்டனர். காரணம் ஏதும் காட்டப்படாமல் நடத்தப்படும் இக்கடும் போருக்கு, உள்ளூர ஓர் காரணம் உண்டு, என்பதை யூகித்தறிந்து கொண்டனர். அறிந்ததுடன், ஓர் முழக்கம் கிளப்பிற்று, மண்டபத்தருகே! அந்த முழக்கம், அமைச்சர் டாக்டர் சுப்பராயனின் உள்ளத்தை உருக்கிவிட்டதாம்-காதிலே ஈயத்தைக்காய்ச்சிஊற்றியது போலிருந்ததாம், அந்தக்கூச்சல்! கூச்சல்!—மந்திரியார் கூறுகிறார் அதுபோல். மக்கள் கூறுகின்றனர், முழக்கம், என்று. வருமுன் உரைப்போர் கூறுகின்றனர், எச்சரிக்கை, என்று. பெயர், எப்படியோ கிடக்கட்டும், இந்தப் போட்டியின் முடிவு தெரிந்ததும் மக்கள், பிராமணர் ஒழிக என்று கூச்சலிட்டனர்—என்பது, ஒப்புக்கொள்ளப் படுகிறது. இந்தக் கூச்சலிட்டவர்கள், காங்கிரஸ்காரர்களேதான், என்பதையும், டாக்டர், தெரிவிக்கிறார்.

காங்கிரஸ் கட்சியிலே, தலைவர் தேர்தல் நடைபெறுகிறது, வெளிப்படையாக, உருவான ஒரு காரணமும் கூறப்படவில்லை, போட்டி நடைபெறுகிறது, ஓமந்தூரார் ஜெயம் பெறுகிறார், ஆந்திரநாட்டுப் பிராமணர் பிரகாசம் தோல்வி அடைகிறார், இந்த முடிவு தெரிந்ததும், மக்கள், பிராமணர் ஒழிக என்று கூவுகிறார்கள், என்றால், சூட்சமம் தெரியவில்லையா! நாலும் நாலும் எட்டு, எட்டுடன் இரண்டுசேர்ந்தால் பத்து என்பது போல மிகமிகச் சாமான்ய மாணவர்களுக்கும், புரிந்து விடுகிறதே சூட்சமம்—மிகமிகச் சாமர்த்தியமாக மறைத்து வைக்கப்பட்ட சூட்சமம்.

உள்ளே நடைபெற்ற போட்டிக்கு பிராமணர் காரணம் என்று, வெளியே கூடி இருந்த மக்கள், எண்ணுகிறார்கள், பிராமணர்களின் திட்டம் தோற்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள், ஓமந்தூரார் ஜெயித்ததும், பிராமணர்களின் திட்டம் தோற்றுவிட்டது என்று தீர்மானிக்கிறார்கள், போட்டியில் கலந்துகொள்ளும் உரிமை கிடைக்காததால், தங்கள் உள்ளத்தில் உள்ளதை மற்றவருக்கு அறிவிக்க, என்ன வழி என்று யோசிக்கிறார்கள், ஓர் யோசனை உதிக்கிறது, பிராமணர் ஒழிக, என்று கூச்சலிடுகிறார்கள். இதுதானே விஷயம்!!

இனி இதனால், வேதனை என்ன? வெற்றிதான் ஓமந்தூராருக்குக் கிடைத்துவிட்டதே, என்று கேட்கத் தோன்றும்.

கெட்ட நடவடிக்கை கொண்ட ஒருவரை நீக்கவோ, திட்டம் ஒன்றைத் தாக்கவோ, 'போட்டி' நடைபெறவில்லை, பார்ப்பனர்—அல்லாதார் பிரச்னைமீதே போட்டி நடைபெற்றது, அதுவும், பார்ப்பனர்—அல்லாதார் என்ற பிரச்னையைப் பிரசாரக் கொள்கையாகக் கொள்ளாமலும், அந்தப் பிரச்னை காரணமாக வரை முறை தவறி நடக்கிறார் என்று குற்றம் சாட்டப்படக்கூடிய நிலையிலே, இல்லாதவரும், மிக நல்லவரும், பழுத்த காங்கிரஸ் வாதியுமாகிய, ஓமந்தூராருக்கே, அவர் பிராமணர் அல்ல, அவருடைய ஆட்சியின்கீழ் பிராமணரின் ஆதிக்கத்துக்கு வழி வகை செய்யப்படும் என்று நம்பிக்கையோடு இருக்க இடமில்லை, என்ற அளவு சந்தேகம் ஏற்பட்ட உடனே, நல்லவரானால் என்ன? காங்கிரஸ்காரரானால் என்ன? நம்மவருக்கு, அவர் இருப்பதால் இலாபம் இல்லை, என்று தெரிந்த பிறகு, அவர் ஆட்சி செய்ய, ஏன் நாம் அனுமதிக்கவேண்டும், இதோ கிளம்பி அவரை ஒழித்து விட்டு, வேறு ஒருவரை பீடத்தில் அமர்த்துவோம், என்று துணிந்து கூறவும், அதன்படியே, காரியம் ஆற்றவும், ஒரு கூட்டத்தினருக்கு எண்ணமும் துணிவும், வழியும் வசதியும், வல்லமையும் இருக்கிறது என்றால், நாட்டிலே, எப்படிப்பட்ட சூழ்நிலை இப்போதும் இருக்கிறது என்பது விளங்கவில்லையா? அது விளங்கும்போது, வேதனை ஏற்படவில்லையா!

திராவிடர் கழக
மாகாண மாநாடு
தூத்துக்குடியில்
மே, 1, 2, தேதிகளில்
நடைபெற
ஏற்பாடாகிவருகிறது.

பானகல்—பொப்பிலி-இவர்கள், தேசத் துரோகிகள், காங்கிரசின் விரோதிகள், ஆகவேதான், அவர்களை ஒழித்தோம்—என்றனர்.

ஓமந்தூரார்மீது படை எடுக்க, என்ன காரணம்? ஓராண்டுக்கு முன்பு அவரை, ஏத்தி ஏத்தித் தொழுதவர்கள், இப்போது, அவரிடம் என்ன குறையைக் கண்டுவிட்டனர்? ஏன் அவர்மீது போரிட்டனர்? சூட்சமம், மக்களுக்குப் புரிகிறது — புரியவேதான், குமாரமங்கலக் குணாளர் மனம் புண்ணானாலும் சரி என்று துணிந்து, அன்று கூவினர், என்று கருதவேண்டியிருக்கிறது. எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரி, எவ்வளவு நல்லவராக இருந்தாலும் சரி, நமக்குப் பயன்படவில்லை, நமது ஆதிக்கத்தை வளர்க்கும் காரியத்திலே அக்கறை காட்டவில்லை என்றால், அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, வேறு ஒருவரை, நமக்குப் பயன்படக்கூடிய ஒருவரை, பீடத்தில் ஏற்ற வேண்டும், அதற்காக, கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், ஜனங்களின் காதுக்கு இனிக்கக்கூடிய ஏதாவதோர் காரணத்தைக் காட்டி எதிர்ப்பைக் கிளப்பவேண்டும், பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ, எப்படியோ வேலைசெய்து வெற்றி காணவேண்டும், என்று எண்ணும் ஓர் கூட்டம் நாட்டிலே இருக்கிறது என்ற உண்மையைக் காணும்போது வேதனையும் கிலியும் ஏற்படாமலிருக்க முடியுமா? நமக்குப் பயன்படவில்லையானால், மலரையும் சருகு என்று கூறி, மதிப்பைக் குறைத்து விடுவோம் என்று மார்தட்டிக் கூறும் மகானுபாவர்கள், மறத்தமிழர் நாட்டிலே, அறிவு அரசு செய்யும் நாட்களிலேயும் ஆதிக்கத்தில் இருப்பது அறியும்போது, உள்ளம் வேதனைப்

படாதிருக்குமா? தடை உத்தரவு பிறப்பித்தார், ஸ்ட்ரைக்குகளை உடைத்தார், சிறையில் பலரைத் தள்ளினார், ஓமந்தூரார்—காங்கிரசு கட்சியின் திட்டத்தின்படி, யார்யாரை ஒடுக்கவேண்டுமென்று முறை இருக்கிறதோ, அதன்படி. அவர்கள் அவர்மீது கோபிக்கவும், அவரும் அவர் உள்ள கட்சியும், கொண்டுள்ள போக்கையும் திட்டத்தையும் கண்டிக்கவும், காரணம் உண்டு—அந்தக் கண்டனம், நியாயமானது — கண்டனத்துக்குப் பக்கபலமாக அவர்களுக்குப் பலம் இல்லை என்பதாலேயே, நியாயமற்ற காரியம் அது என்று கூறிவிட முடியாது. ஓமந்தூராரின் நடவடிக்கையினால்—அவருடைய தலைமையிலே உள்ள மந்திரி சபையின் போக்கினால், அந்த மந்திரி சபையை அமைத்த காங்கிரசின் கொள்கையினால், உரிமை இழந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அல்ல, அவரை ஒழிக்கக் கங்கணம் கட்டியவர்கள். இந்தக் காரியத்துக்குச் 'சபாஷ்', கூறியவர்கள், அவருடைய சொந்தக் கட்சியினர், அவரைக் கவிழ்க்கச் சதி செய்தனர். பெரியார் ராமசாமியோ, ஜீவானந்தமோ அல்ல, கவிழ்க்கும் வேலைக்குக் கிளம்பினவர்கள், ஓமந்தூரார் போலவே கதரணிந்து, அவருடனேயே காங்கிரசில் தங்கி, அவருக்குக் கிடைத்ததுபோலவே மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தைப் பெற்று, மக்களின் ஆட்சிமன்றத்திலே இடம் பிடித்துக் கொண்ட, வைத்தியநாத ஐயரும், வரதாச்சாரியாரும், கிளம்பினர்! காசா சுப்பாராவ் ஜல்லடம் கட்டினார். பாரததேவி ஆசிரியர் ராமரத்தின ஐயர், சரம் விட்டார். இந்துஸ்தான் ஆசிரியர் நாராயணஐயங்கார், இழித்தும் பழித்தும் எழுதினார். இவைகளைக்கண்ட மக்கள், பிராமணர் ஒழிக, என்று கூவாமல், வேறென்ன சொல்லிக் கூவமுடியும்? ராதாபாய் மணாளரின் பண்பட்ட உள்ளம் புண்படுமோ என்று அந்த நேரத்தில் தோன்றும்! ஓமந்தூரார் ஒரு தவறும் செய்யவில்லை, அவரிடம் ஒரு குறையும் காணோம், அவரை, மதுரைஐயரும் திருவல்லிக்கேணி ஆச்சாரியாரும், ஆந்திரதேசப் பந்துலுவும் எதிர்க்கிறார்களே, காரணமின்றி, என்று எண்ணியபோது, உள்ளம் கொதித்தது, அந்தக் கொதிப்பிலே இருந்து பிறந்தது ஓர் முழக்கம்—பிராமணர் ஒழிக என்று. இப்படி எல்லாம் கூவலாமா? அதிலும் காங்கிரஸ்காரர்கள் இப்படிக் கூச்சலிடலாமா?" என்று கேட்கிறார் டாக்டர் சுப்பராயன். "இப்படி எல்லாம் சதி செய்வதா நல்லவரை வீழ்த்த? அதிலும் காங்கிரஸ்காரர் காங்கிரஸ்கண்ணியரைக் கவிழ்ப்பதா, என்று மக்கள் கேட்பர்—ஆனால், குறைகூறுபவரோ, அமைச்சராக இருப்பவர்—போலீஸ் இலாகாவின் பொறுப்பைக் கொண்டுள்ளவர்.

"என் காதிலே அந்தச் சத்தம் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோலிருந்தது" என்றார் டாக்டர். "ஓமந்தூராரை ஒரு நேர்மையான காரணமுமின்றி, அவருடைய சொந்தக் கட்சியினர் என்றே கூறிக்கொண்டு கவிழ்க்க வேலை செய்தார்களே, சில ஐயர்மார்கள், அதைக்கண்டபோது, எங்கள் கண்களிலே பழுக்கக்காய்ச்சிய இரும்புத்துண்டுகள் நுழைந்தது போலிருந்தது டாக்டரே! நீர், அந்த வேதனையை அறியமாட்டீர்!" என்று மக்கள் கூறுவர் — மந்திரியாருக்கு மேலும் கோபத்தை மூட்டினால், அவருடைய அதிகாரம் தாக்கக் கிளம்பி வருமே, என்றுமட்டுமே, நேரடியாகக் கூறாமலிருக்கிறார்கள். அவர்கள் கூறினாலும் கூறாவிட்டாலும், டாக்டர் சுப்பராயன், ஏன் யோசிக்கக் கூடாது — யோசித்தால், மக்கள் என்ன கூறுவார்கள் என்பது புரியுமே—இவருடைய காது வேதனைப் பட்டதுதானா பிரமாதம்! மக்களின் மனம் அடைந்த வேதனையைவிடவா இவருடைய வேதனை அதிகம்!

இமயமே சாய்ந்திட்டாலும்
இம்மியும் நேர்மை நீங்கார்

அமைதியின் வடிவமானார்
அன்பினால் ஆளவந்த

தமிழகக் காந்தி ராமசாமி
நம் முதலமைச்சர்

கமழ் தரும் புகழால் மீண்டும்
கட்சியின் தலைவரானார்.

என்று களிப்புக் கவிதை, தினசரியில் வெளிவந்தது.

கமழ் தரும் புகழ்! தமிழகக்காந்தியாம் ராமசாமிக்கு! ஆனால், அந்தப் புகழ்மணத்தை முடைநாற்றம்என்று கூறினர் சிலர்—அவர்கள் இனியும் அதைக்கூறுவர் தமிழகக்காந்தி ராமசாமியைமட்டுமல்ல, திராவிடத் தந்தை ராமசாமியையும்! இப்படி ஒரு கூட்டம் எதிர்த்தபடியே இருக்கும், அவ்வப்போது, நேர்மையின் வெற்றிக்காக வேலை செய்தபடிதான் இருந்தாக வேண்டும் என்பதுதான் தமிழகத்தின் தனிப்பண்போ! ஒரே கூட்டத்துக்குள் இருந்துகொண்டு, ஒரே கொடி, ஒரே கட்சி என்று சொந்தம் பேசிக்கொண்டு இருந்தாலும், தமிழகக்காந்தி என்று தக்கோர் புகழ்ந்தாலும், மைலைக் கூட்டத்தாரின் சூழ்ச்சியும் வியன்பகை வகுப்புவாத வெறியும், தாக்கியபடிதான் இருக்குமென்றால், காங்கிரஸ் ராமசாமியாக இருப்பவர் எந்தவிதத்திலே திராவிட ராமசாமியைவிட அதிக மேலான நிலையில் இருக்கிறார் என்று கேட்கிறோம். உள்ளே இருந்தபடி, காங்கிரஸ் ராமசாமி, உள்ளம் குமுறுவதும், வெளியே இருந்தபடி வேல்பாய்ந்த உள்ளத்துடன், திராவிடராமசாமி இருப்பதுதானா, இனியும் நாட்டுக்குரிய இலட்சணம்! இந்த வேதனை தரும் நிலைபோக, மார்க்கமே கிடையாதா? பார்ப்பனத் துவேஷி பெரியார் என்று பகையை மூட்டினர், பாரதபுத்திரர், என்று, பார்ப்பனர், அல்லாதவர், ஆகிய அனைவரையும் கூறிக் களித்துப் பெருமையடைந்த தமிழகக் காந்திக்கும், திராவிட ராமசாமிக்குள்ளது போன்றே, எதிர்ப்பு இருக்கக்காண்கிறோம். ஏன் இந்த நிலை, என்று கேட்க, இந்த நாட்டிலே நேர்மையாளர்கள் எவருமே இல்லையா? எந்த ரகமான ராமசாமியாக இருந்தாலும் எதிர்ப்பு நிலை, ஒரே அளவாகவும், குறிப்பிட்ட ஒரே இடத்திலிருந்தும் வருவதை ஏன், உணரமுடியவில்லை, எப்போது உணருவர்.?

*

ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏப்ரல் திங்களில் இருந்து புதுக் கணக்குத் தொடங்குவதால், மார்ச் முடியப் பாக்கி வைத்திருக்கும் ஏஜண்டுத் தோழர்கள், இவ்வறிக்கை கண்ட ஒரு வாரத்துக்குள் தங்கள் பாக்கி முழுவதையும் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறோம். பாக்கி அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்கு 11—4—48 முதல் பத்திரிகை கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்.

சிறுத்தையின் சித்தாந்தம்

தில்லைத் தீட்சிதர்

7-ம் பக்கத் தொடர்ச்சி

நடத்த முனையுமானால், இப்போதுள்ளது போல உள்நாட்டு முதலாளிகளின் மனம் கோணும் என்பது மட்டுமல்ல. பிரச்னை, 'சிக்கல்' சர்வதேசியப் பிரச்னை அளவுக்குச் சென்றுவிடும். இருபதாண்டுகள், இந்தியாவைக் குத்தகைக்கு எடுக்கவிருப்பும், இந்திய முதலாளிகளில் முக்கியமானவர்கள், முன்னணியினர், அமெரிக்க முதலாளிகளின், பங்காளிகள். டாலர் ஏகாதிபத்யத்திட்டத்தின் ஒரு சிறு பகுதிதான், இன்று இங்கு ஏற்பட்டு வரும் சமதர்ம பழிப்புத்திட்டம்.

டில்லி, பார்லிமெண்டில், உள்ள உரம்படைத்த உறுப்பினர் ஒருவர், நிதிமந்திரி சண்முகத்தை நோக்கி, "ஏனய்யா, முதலாளித்வமுறையை ஊட்டிவளர்க்கிறீர்? ஏன், உள்நாட்டு முதலாளிகளிடமும், வெளிநாட்டு முதலாளிகளிடமும், கடன்வாங்கி, தொழில்களைத் துவக்கும் திட்டம் தீட்டுகிறீர்? ஏன், தனிப்பட்ட முதலாளிகளின்தொழில்களைச்சர்க்காரே ஏற்று நடத்த முற்படக்கூடாது?" என்று மார்ச் 16-ந்தேதி கேட்டார். நிதிமந்திரி, தம்முடைய நேர்த்தியான புன்னகையிலே ஒன்றைத்தான் பதிலாக அளித்திருப்பார். அங்கு ஓர் அஞ்சாநெஞ்சுடைய அறப்போர் வீரன், கேட்டது போதாது — பலனும் விளையாது. நாடு, கேட்கவேண்டும் அந்தக் கேள்வியை; நாட்டின் முற்போக்குச் சக்தி, உரிமைப்போரின் ஈட்டிமுனை, என்றெல்லாம் சிறப்புப் பெயரிட்டழைக்கப்படும், வாலிபர்கள் கேட்கவேண்டும் அந்தக் கேள்வியை. நிதி மந்திரியை மட்டுமல்ல—அவர் வசந்தா ஆலைக்கு அதிபர், அதனை அனைவரும் அறிவர்—ஆளவந்தார் அனைவரையுமே கேட்கவேண்டும், "ஏன் முதலாளித்துவ முறையை இப்போது, இவ்வளவு வெளிப்படையாக, ஆதரிக்கிறீர்கள், கட்டிக் காத்திட முனைகிறீர்கள், அன்பூட்டிப் பாராட்டுகிறீர்கள்; வெட்கமற்று; உண்மையை ஊரார் ஓர் நாள் உணர்ந்து கொள்வார்களே! அப்போது நம்மைப்பற்றி என்ன எண்ணுவார்கள் என்ற அச்சமுமற்று!" என்று கேட்கவேண்டும்.

"ஆமாம்! கேட்கத்தான் வேண்டும். கேட்பதற்காகத்தான், சமதர்மிகளின் தலைவர், ஜெயப்பிரகாசர் வந்திருக்கிறார், மதுரையில் மாநாடு கூட்டினார், தமிழகத்தில் சுற்றுப்பயணம் நடத்துகிறார்," என்று ஆர்வத்தோடு கூறும் இளைஞர், நமது மனக்கண் முன் நிற்கிறார். அவருடன் உரையாடல் நடத்திக்காணும் கருத்தினை, அடுத்த இதழில் தீட்டுவோம்.

இயற்கைச் செல்வம்

தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், ஆகிய பகுதிகளின் தொகுப்பாக அமைய வேண்டிய திராவிடம், இயற்கை வளத்திலும், செல்வத்திலும், இந்தியதுணைக்கண்டத்திலேயே, எந்தப்பகுதியையும் விட, மிக உயர்ந்ததாக இருக்கும் என்று கூறிவந்திருக்கிறோம். தமிழகத்திலே, தூங்கிக்கொண்டுள்ள இயற்கைச் செல்வததைப்பற்றிய குறிப்புகளையும் அவ்வப்போது, தந்து வந்திருக்கிறோம்.

ஆந்திரம், இது போன்றே இயற்கைச் செல்வம் கொழிக்கும் நாடுதான். மத்யசர்க்கார் ஆட்சி எனும் 'மாயமான் வேட்டை'யின் காரணமாக, இந்த மகத்தான உண்மையை மறந்து விடுகின்றனர். ஆந்திரநாட்டின் ஓர்பகுதியான, ராயலசீமாவில் அப்ரகம், இப்சம், ஆஸ்பெஸ்டாஸ், முதலிய பொருள்கள் ஏராளமாக உள்ளன. பொதுவாக ஒருகுறைபாடு நமது நாட்டுக்குஉண்டு என்று கூறுவர். அதாவது, இங்கு, இரும்பும், நிலக்கரியும் கிடையாது, இந்த இரு பொருள்களும் இல்லையானால் இயந்திர சாதனங்களைக் கொண்ட தொழில் வளர்ச்சிக்கு வழியில்லை, எனவேதான், இரும்பும் நிலக்கரியும் கிடைக்கும் வடநாடு, தொழில் வளம் உள்ளதாக விளங்குகிறது என்று கூறுவர்.

சேலம் மாவட்டப் பகுதியிலே கிடைக்கக்கூடிய இரும்பின் அளவைக் குறிப்பாக மதிப்பிடும்போது, நிபுணர்கள் மலைக்கிறார்கள். அவ்வளவு ஏராளமாகக் கிடைக்குமாம் இரும்பு.

நிலக்கரி கிடைக்காவிட்டாலும், அது போன்று உபயோகப்படக் கூடிய, கரிப்பொருள், ஏராளமாக, தென்ஆற்காடு மாவட்டத்திலே, பூமிக்கடியிலே தூங்கிக்கொண்டிருக்கிறது.

தக்கவிதமான ஆராய்ச்சி நடத்தப்பட்டால், இயற்கைச் செல்வம், ஏராளமாக இங்கு இருக்கக்காணலாம்.

ராயலசீமாவிலும், சுண்ணாம்புக் கல், கனிஜயம் முதலிய பொருள்கள் கிடைக்குமென்று நிபுணர்கள் அறிவிக்கின்றனர்.

மேலும், ஆந்திரத்திலிருந்து, 3-கோடி 20 இலட்சம்டன் அளவுள்ள நிலக்கரி கிடைக்கக்கூடு மென்றும், கூறப்படுகிறது.

இவ்வளவு இயற்கைச் செல்வமும், எடுப்பாரற்ற நிலையில், பூமிக்கடியிலே கிடக்க, இங்குநாம், இயந்திர சாதனத் தொழிலுக்கு வடநாடுதான் இலாயக்குள்ள இடம் என்று ஏமாளித்தனமாக நம்பிக்கொண்டு, குடிசைத்தொழிலை விருத்தி செய்கிறோம், என்று பேசி, இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிகமிக மட்டமானதாக்கி விடுகிறோம்.

நண்பர்களுக்கு

பல நண்பர்கள், நான், பல இடங்களிலே பேசிய பேச்சுக்களை, சிறு நூல் வடிவில் கொண்டுவரும் எண்ணம் கொண்டு, எழுதிக்கேட்டுள்ளனர். சிலர், தெரிவிக்காமலேயேகூட, ஏடுகளை வெளியிடுகின்றனர். அவர்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள். கூட்டத்திலே, எடுக்கப்படும் குறிப்புகள், பூர்த்தியானவை அல்ல — பல கருத்துகள் விடுபட்டுப் போவதுடன், குறிக்கப்பட்ட பலவும் சிதைவுற்றே உள்ளன. இவைகளை ஆதாரமாகக் கொண்டு, நூல் வெளியிடுவது, பயனுடையதாகாது. எனவே, அதுபோல், யாரும், நூல் வெளியிடவேண்டாமென்றுகேட்டுக் கொள்கிறேன். தனித்தனியே, பதில் எழுதுவதற்குப் பதிலாக, இதனையே பொது அறிவிப்பாக வெளியிட்டிருக்கிறேன். நண்பர்கள், இந்த வேண்டுகோளைப் பொருட்படுத்தி நடந்து கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

காஞ்சிக் கடவுளுக்குக் கல்லடி

4-ம் பக்கத் தொடர்ச்சி

போகின்றேன்; என்னுடைய ஆராய்ச்சி எதைச் சரியென்று எனக்கு அறிவிக்கின்றதோ, அதனையே நான் பின்பற்றுவேன்; அதற்கிடையில், அவ்வப்போது என்னுடைய ஆராய்ச்சியால் கிடைக்கும் சிற்சில உண்மைகளை வைத்துக் கொண்டு அவையே முடிந்த முடிபெனக் கொள்ள மாட்டேன்"

என்று கூறியிருக்கலாம். இங்ஙனம் செய்வதைத்தானே ஒரு ஆராய்ச்சியாளன், தன்னுடைய ஆராய்ச்சியின் பயனாகக் கொள்ள முடியும்—கொள்ளவேண்டும். இங்ஙனமன்றிப், பச்சோந்திக்கோலம் கொள்பவனை ஒரு உண்மையான நோக்கத்தோடு ஒன்றை ஆராய்கின்றான் என்று அறிவுடைய உலகம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது.

இனிப், பௌத்த சமயத்தை ஆராய்ந்து, அதுவே உண்மைச்சமயமெனக் கண்டறிந்து, அச்சமயத்துக்குரிய நெறிகளைக் கடைபிடித்து அச்சமயவழி ஒழுகிய சாக்கியர், மேலும் தம்முடைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தியதன் பயனாகச் சைவசமயமே உண்மைச் சமயமெனக் கண்டறிந்து அச்சமயவழி ஒழுக முயல்கிறார். முயன்றவர், தாம் முன்னர் மேற்கொண்ட புத்தசமயத்துக்குரிய கோலத்தை மட்டும்மாற்றவில்லை. புத்தவடிவத்தில் நின்றுகொண்டே சைவசமய வழிபாடு செய்ய முற்படுகின்றார். ஒன்றைப் பொய்யென்றும் இன்னொன்றை மெய்யென்றும் கண்டு, ஒரு முடிந்த முடிபுக்கு வந்த ஒருவர், பொய்யைப் புறக்கணித்துவிட்டு மெய்யைக் கொள்வதே முறை; அதுவே நேர்மையுங்கூட. அங்ஙனமன்றிப், பொய்யைப் போர்த்துக் கொண்டு மெய்யைக் கடைப்பிடிப்பதாகச் சொல்கொள்வது நடிப்பு மட்டுமல்ல; நாட்டை ஏமாற்றும் நயவஞ்சகமுமாகும்.

புத்தசமயத்தை ஆராய்ந்து அதன்படி ஒழுகிய சாக்கியர், சைவ சமயத்தை ஆராய்ந்த போது என் அச்சமய முறைப்படி ஒழுக அச்சப்பட்டார் என்பது தெரியவில்லை. ஒரு நேர்மையான ஆராய்ச்சியாளன், தான் கண்டறிந்த உண்மையை மற்றவர்களும் தெரியும்படி செய்வதே முறை. அவர்கள் அந்த உண்மையைத்தெரிந்தும் அதனை ஏற்க மறுப்பார்களானால், "அவர்கள் அந்த உண்மையை அறிந்துகொள்ளும் பக்குவத்தை அடையவில்லை" என்று அதற்குரிய பக்குவத்தை அவர்களுக்கு உண்டாக்கமுயலவேண்டும். தான் கண்டறிந்த ஒன்று களங்கமற்ற உண்மையாக இருக்கும் பட்சத்தில், அதனை மக்கள் உடனுக்குடன் உணர மறுத்தாலும், படிப்படியாக அதன் உண்மையை உணர்ந்து அதன்படி ஒழுகத்தலைப்படுவர். இந்தச்சிறந்த முறையையே உண்மைக்காக உழைக்கும் ஆராய்ச்சியாளர் கடைப்பிடிக்கின்றார்கள். இதில் வெற்றியும் பெற்றார்கள் — பெறுகின்றார்கள்.

ஆனால் இங்கு பேசப்படும் ஆராய்ச்சியளாரான சாக்கியர், தாம் கண்டறிந்த உண்மையைப் பிறர் அறியாதபடி மறைக்கிறார், சைவசமயத்தை ஆராய்ந்ததில் தாம் கண்ட உண்மையை மறைத்ததோடுமட்டும் அவர் நின்றுவிடவில்லை. தம்மை ஒரு புத்தசமயத்தைச் சார்ந்தவனாகவே பிறருக்குக் காட்டியும் கொண்டார். சைவசமயத்தைப் பின்பற்றுவதற்கு அறிகுறியாகக் காட்டப்படும் திருநீற்றையோ அக்கமணியையோ அவர் அணியவில்லை. அதற்குமாறாக அவர், புத்த சந்நியாசிகள் அணியும் மஞ்சள் உடையையே அணிந்திருந்தார். என்றாலும் அவர் தன்னை ஒரு சைவனாகவே நினைத்துக்கொண்டாராம். எப்படியிருக்கிறது 'சைவமெய்யன்பரின்' கோலம், பாருங்கள்.

இவ்வளவோடும் அவர் நின்றுவிடவில்லை. சைவ சமயத்தை ஆராய்ந்து அதுவே உண்மைச் சமயமெனக் கண்டறிந்த சாக்கியர், அச்சமயக்கடவுளை வழிபட்ட முறைதான் விந்தையிலும் விந்தையாகும். ஒரு சமயத்தை ஆராய்ந்து அதில் புதைந்தும் பொதிந்து கிடந்த உண்மையைக் கண்ட ஒருவருக்கு, அச்சமயக் கடவுளை எப்படி வழிபடுவது என்பதும் தெரிந்திருக்க வேண்டுமன்றோ! ஆனால் இங்கு பேசப்படும் ஆராய்ச்சியாளருக்கு, சைவசமயமே மற்றைச் சமயங்கள் எல்லாவற்றையும் விட மேலானது — உயர்ந்தது என்ற 'உண்மை' புலப்பட்டதேயொழிய, அதனை எப்படி வழிபடுவது என்பது அவருடைய ஆராய்ச்சிக்கு எட்டவில்லையாம். அதனால், அவர் சிவலிங்கத்தைக்கண்டதும் அதனை எப்படி வழிபடுவது என்று தெரியாமல் திகைத்து நின்றாராம். உடனே அவர் எதிரில் ஒரு செங்கல் தென்பட்டதாம். அதனை எடுத்துச்சிவலிங்கத்துக்குக் குறிபார்த்து அதன் மீது வீசியெறிந்தாராம். பின்னர் செங்கல்லால் சிவலிங்கத்தை அடிப்பதையே தொண்டாகவும் கொண்டாராம்.

சைவசமய நூல்களையும், பிறசமய நூல்களையும் ஐயந்திரிபற ஆராய்ந்து கடைசியாகச் சைவசமயம் ஒன்றில் தான் உண்மை ததும்பி வழிவதைக் கண்டறிந்த சாக்கியருக்கு, அச்சமயக்கடவுளை எப்படி வழிபடுவது என்பதுமட்டும் தெரியாமல் திகைத்தார் என்பதை எவராவது நம்பமுடியுமா?

இனி, இந்நிகழ்ச்சியால் பெறப்படும் உண்மை என்னவென்றால், சாக்கியர் என்பவர் ஒரு நேர்மையான ஆராய்ச்சியாளர் என்பதும், அவர் பல சமயங்களை ஆராய்ந்ததில் புத்த சமயமே ஓரளவுக்கு உண்மையான சமயமாக அவருடைய ஆராய்ச்சிக்கு எட்டியதென்பதும்; அதனாலேயே அவர் புத்த சமயத்தைத் தழுவினார் என்பதும்; புத்தமதத்தைத் தழுவிய பின்னரும், வேறு பல சமய நூல்களை ஆராய்ந்ததில் சைவ சமயமே மிகவும் அருவருப்பான சமயமாகத் தெரிந்ததென்பதும், அதனாலேயேஅவருக்கு அளவு கடந்த சினம் ஏற்பட்டுச், சிவலிங்கத்தைக் காணும் போதெல்லாம் அதனைக் கல்லால் அடித்தார் என்பதும் சிறிதும் ஐயுறவுக்கு இடமின்றி அறியப்படும் உண்மையெனக் கொள்க. இதனால், நாம் பௌத்த சமயத்தை ஆதரிப்பதாகவோ அன்றிச் சைவ சமயத்தை வெறுப்பதாகவோ எவரும் கருதிவிடக் கூடாது. நாம் எந்தச் சமயத்தையும் சாராது, எதனையும் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ச்சி வாயிலாக உண்மையை அறிய விரும்புவதே நம்முடைய நோக்கமாகும். பெரியபுராணத்தில் காணப்படும் இந்நிகழ்ச்சி, நாம் மேலே தீட்டியுள்ள உண்மைகளையே படம் போட்டுக் காட்டுவதாக உள்ளது.

இனிப், புத்தசமயத்தைச் சார்ந்து நின்று அச்சமய வழி ஒழுகிய ஒருவரின் நிகழ்ச்சி, சைவ சமய நூலான பெரிய புராணத்தில் எப்படி இடம் பெற்றதென்றால், பெரிய புராணம் என்பதாக ஒரு நூலை வெளியிட்டு

அதன் வாயிலாகச் சைவ சமயத்துக்கு உயர்வு தேட முயன்றவர்கள். பல கதைகளைப் புனைந்தும், மாற்றியும், திரித்தும் தமக்கேற்றபடி தொகுத்துக் கொண்டார்கள். திரித்துக் கூறப்பட்ட கதைகளில் சாக்கியர் நிகழ்ச்சியும் ஒன்று. புத்த சந்நியாசி ஒருவருடைய வரலாற்றைத் தலைகீழாக்கி, அதனை ஒரு சிவனடியாரின் வரலாறாக மாற்றிவிட்டனர் என்ற உண்மை, இந்நிகழ்ச்சியை ஆராய்ச்சியுணர்வோடு படிக்கும் எவருக்கும் எளிதில் விளங்கக்கூடிய ஒன்றாகும். இல்லையேல், பாலால் முழுக்காட்டிப் பச்சிலையாலும் மலராலும் அருச்சித்து வழிபடவேண்டிய சிவலிங்கத்தை ஒருவன் கல்லால் அடித்தான் என்றும், "இளங்குளவிகள் எது செய்யினும், அது, பெற்றோர்களுக்கு இன்பூட்டுவதுபோல், இச்செய்கை சிவனுக்கும் இன்பூட்டிற்று" என்றும் மனமறிந்த பொய் கூறுவார்களா? சாக்கியர் சிவலிங்கத்தைக் கல்லால் அடித்தற்குரிய காரணத்தை விளக்கவந்த சேக்கிழார் இவ்விதம் கூறியுள்ளார். என்னே சேக்கிழாரது அறிவுத்திறன்! சாக்கியர், பெற்றோர்மீது கல்வீசி மகிழும் குழந்தைப் பருவத்தினரல்லரே! அவர் பல சமய உண்மைகளை ஆராய்ந்தறிந்த மூதறிஞர். அறிவில் மட்டுமல்ல—ஆண்டிலும் முதியவர். அப்படிப்பட்டவர், சிவலிங்கத்தை வழிபடும் முறை எது என்பதைத் தெரியாது, ஒரு குழந்தைபோல், கண்ணுக்குத் தென்பட்ட ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின்மீது குறி பார்த்து அடித்தார் என்பதையும், அது, அளவு கடந்த அன்பின் மேலீட்டால் செய்யப்பட்ட ஒரு செயல் என்பதையும் யார் நம்புவார்கள், அறிவுக் குருடரைத் தவிர!

●

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்

[28—3—48 தொடர்ச்சி]

"முருகன் செய்து வந்தது அத்தனையும் வெறும் ஜாலம். எப்படியாவது என்னை மெதுவாகக் கெடுத்துவிடவேண்டுமென்று அவன் எண்ணினனேயொழிய, என்மீது அவனுக்கு அந்தரங்கமான ஆசை இல்லை. அது எனக்கு எப்படித் தெரிந்தது தெரியுமா! கேள் சொல்கிறேன். என்னைத் தவிர வேறு யாரையும் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன் என்று கூறினனே முருகன், அவன் நான் இல்லாத நேரத்திலெல்லாம் நமது வேலைக்காரி..............யிடம் சரசமாடிக்கொண்டு இருந்தான். இவர்களுக்குள் நடக்கும் "சல்லாபம்" எனக்குத் தெரியாது. இரண்டு பேரும் இரகசியமாகப் பேசுவார்களாம். என் மீது எப்படிப் பிராணனையே வைத்துக் கொண்டிருப்பதாகக் கூறி வந்தானோ அதுபோலவே, அவளிடமும் கூறினன் போலிருக்கிறது. அவள் கணவனே ஒரு குடிகாரன். அவனுக்கு, முருகனே குடிக்கக் காசு கொடுத்து அனுப்பிவிட்டு, இவளிடம் பேசிக் கொண்டிருப்பானும்; ஒரு நாள், புருஷன், இவர்களைக் கையும் பிடியுமாக பிடித்து விட்டான். நல்ல உதையாம் முருகனுக்கு. முருகன் ஊரை விட்டுப் போனதற்கே முக்கிய காரணம் இதுதான். மேலுக்குத்தான், என்னால் சண்டை வந்ததாகப் பாட்டிவாத்தியார் கூறினார். உண்மையிலே நடந்தவற்றை வேலைக்காரியின் புருஷனே என்னிடம் ஒரு நாள் கூறினன்; கூறிவிட்டுத்தான், அவனைக் கொல்கிறேன், வெட்டுகிறேன் என்று கூவினன். அவளும் இனி இங்கிருந்தால் ஆபத்து என்று எண்ணி, தாய் வீடு போய் விட்டாள். இது சேதி. முருகனை இங்ஙனம் இருந்தான். என்னிடம் சிறு பிள்ளையிலிருந்து பழகியவன் முருகன். உன் 'முத்து' நேற்று முளைத்தான். அதிலும் படித்தவன் சீமைக்குப் போகிறான் என்கிறாய். அவன் எந்தச்சீமான்வீட்டுப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு சொகுசாக வாழலாம் என்று இருப்பானா, உன்னைக் கலியாணம் செய்துகொள்வானா? உன்னை மயக்குகிறான். ஜாக்கிரதை! ஏமாறாதே" என்று கமலா விஸ்தாரமாகக் கூறினள்.

"அக்கா, முருகன் படியாதவன்; இவர் படித்தவர். இவர் சொன்ன சொல்லை மாற்றி விடுவாரா" என்று நான் கேட்டேன். எனக்கு "படித்தவர்கள்" என்றால், அவர்கள் யாவருமே நாணயமாக நடப்பவர்கள் என்று அப்போது எண்ணம்.

"விமலா, அந்த ஆள் படித்தவன் என்கிறாயே, அதனால்தான் அவன் உன்னை மணக்கமாட்டான் என்று சொல்கிறேன். அவன் படிப்பிலே, தாசி குலம் என்பது இழிந்தவகுப்பு, கேவலமானது, ஏதோ மனிதரின் காமத்துக்குத் தாசிகள் தயவு வேண்டும் என்று இருக்கிறதேயொழிய, தாசியானாலும் ஆசைப்பட்டால் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்றா இருக்கிறது? பைத்தியமே, படித்தவனானதால்தான், தனக்கு அதிகமாக இருக்கிறது, உறுதி இருக்கிறது என்று எண்ணாதே. படித்தவர்கள் நீ நினைக்கிறபடி, உறுதியுள்ளவர்களானால் நமது ஜாதியிலே பாதிப் பெண்கள் இந்நேரம் குடும்ப ஸ்திரீகளாகி விட்டு இருப்பார்களே. படித்துப் பட்டம் பெற்றுப்பெரிய பெரிய அதிகாரிகளாக இருப்பவர்களிலே எவ்வளவோ பேர் தாசி வீடு செல்கின்றனர். தாசியைக் கலியாணம் செய்துகொண்டனரா" என்று கமலா கேட்டாள்.

என் மனதிலே திகிலும் சந்தேகமும் குழப்பமும் உண்டாகிவிட்டது. இருந்தாலும் எல்லோருமா அக்கா சொல்கிறபடி இருப்பார்கள், முத்துவுமா அப்படி இருப்பார், என்றே நான் வாதாடினேன்.

கடைசியில் அக்கா ஒரு யுக்தி செய்தாள்; அம்மா இல்லாத நேரமாகப் பார்த்து, நான் ஒரு நாள், உன் முத்துவின் யோக்கியதை எப்படி இருக்கிறது என்பதை, பரீட்சை

செய்துபார்த்து உனக்கே காட்டி விடுகிறேன்" என்றுரைத்தாள்.

முத்துவின் விஷயமாக என்ன பரீட்சை நடத்தப் போகிறாள் கமலா என்பது எனக்கு விளங்கவேயில்லை. மனிதரின் மனநிலை இதுவென உணர்ந்து கொள்வது என்ன அவ்வளவு சுலபமான காரியமா? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று பழமொழி கூறுவார்களே தவிர, அது அவ்வளவு தெளிவாகத் தெரியக் கூடியது அல்லவே. குழம்பிலே உப்புச் சரியாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், வாயிலே ஒரு சொட்டு ஊற்றிப்பார்க்கிறோம். அது போன்றதா இது, என்று எண்ணினேன். என்றால் ஒன்றும் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எனக்கும் அக்காவுக்கும் நடந்த சம்பாஷணை அம்மாவுக்குத் தெரியாது. அக்கா மூச்சு விடவில்லை. என்னைவிட அவள் எவ்வளவு நல்லவள் பார்த்தீர்களா! கமலா பாட்டு வாத்தியார் மகனுடன் ஏதோ ஒருமாதிரியாக நடக்கிறாள் என்று எனக்குத் தெரிந்ததும், நான்வீட்டையே ஒருகலக்குக்கலக்கி விட்டேன். அக்காவோ நானே பூரா விஷயத்தைக் கூறியுங்கூட, அம்மாவிடம் ஒருபேச்சுக்கூடக் கூறவில்லை

வரவர, வீட்டுக்காரியங்களை அக்காவே கவனித்துக்கொண்டு வந்தார்கள். அம்மா பாரதம் இராமாயணம் படிப்பதும், கிராம நிலத்தைப் பார்ப்பதும், நகைநட்டுச் செய்வதாகஇருந்தால் அதைக் கவனித்துக்கொள்வதுமாக இருந்தார்கள்.

வீட்டிற்கு ஜமீன்தாரருக்கு வேண்டியவர்கள் பலர் வருவார்கள். அவர்களை வரவேற்பது, உபசரிப்பது, பேசிஅனுப்புவது எல்லாம் அக்காவேதான். அது எப்படித்தான் கமலா கற்றுக்கொண்டாளோ தெரியவில்லை. உபசாரம் செய்வதிலே பலே கெட்டிக்காரியாகி விட்டாள்.

ஜமீன்தாரின் சுபாவமே ஒரு தினுசானது. காட்டுக்குள்ளே புலி நுழையும் போதே மோப்பம் பிடித்துக் கொண்டும், வாலை சுழற்றிக் கொண்டும் வருமாமே, அதுபோல வருவார். உள்ளே நுழைந்தால் கமலாவின் ஒரு சிரிப்பு, ஒரு பேச்சு, பலியை எலியாக்கிவிடும்.

ஜமீன்தார் உள்ளே நுழைந்தார் என்றால், கமலா அவரை வாருங்கோ ஜமீன்தார்வாள் என்றோ, கண்ணாளனே இங்குவா என்றோ கூப்பிட்டு மகிழுவைப்பாள் என்று எண்ணுகிறீரா? இல்லை. அவர்உள்ளே நுழைந்ததும் புன்சிரிப்புடன் அவரைப் பார்ப்பாள், உடனே 'விமலா உன் அத்தான் வந்துவிட்டார், காப்பி போடு" என்று உத்தரவிட்டுவிட்டு மாடி அறைக்குச் செல்வாள். மோட்டாரைவிட்டு இறங்கும்போது இருந்த முடுக்கு, உள்ளே நுழையும்போது இருந்த முறைப்பு இவைகள் மாயமாய்ப் போய்விடும். ஜமீன்தார் குழந்தைபோலக் கமலாவின் பின்னால்போவார். அக்காவிடம் "வசிய மருந்து" இருக்கிறது என்று ஊரிலே யாரோ பேசிக் கொண்டார்களாம். வசியத்துக்கு மருந்தாவது மந்திரமாவது. அவளுடைய புன்சிரிப்பே மந்திரம்!

கொஞ்ச நேரங்கழித்து ஜமீன்தார், கீழே வருவார்; அக்கா, நான் இருவரும் அவரிடம் பேசுவோம், வேடிக்கையாக.

"கமலா! கந்தசாமிச் செட்டியார் வந்தாரா?" என்று கேட்பார் ஜமீன்தார்.

"வந்தாரே - தொந்திக்கணபதி" என்று நான் பதில் கூறுவேன். செட்டியாருக்கு வயிறு சற்றுப் பருத்துச் சரிந்து இருக்கும். அக்காவும், ஜமீன்தாரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

"செட்டியாரைத்தான் உனக்கு ஏற்பாடு செய்யப்போகிறாராம்" அத்தான் என்று அக்கா கூறுவாள்.

"போ அக்கா, உனக்கு எப்போதும் கேலிதான்" என்று நான் கூறுவேன்.

"செட்டியார்வந்தார், நான்செடிக்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தேன். அதிகநேரம் பேசுவதற்கில்லை. போய் விட்டார்" என்று அக்கா சில நாட்களிலே சொல்வாள். ஜெமீன்தார் "கமலா, உனக்கு இவ்வளவு கர்வம் கூடாது. செட்டி என்ன எண்ணிக் கொண்டிருப்பான். வந்த மனுஷனை வா, உட்காரு, என்றுகூடக் கேட்காது இருப்பதா மரியாதை" என்று கூறிக் கோபிப்பார். சில சமயங்களிலே "செட்டியார் சாயங்காலம் நாலுமணிக்கு வந்தவர் இரவு ஏழு மணி வரையிலே வாயாடிக்கொண்டிருந்தார்" என்று அக்கா சொல்வாள். ஜெமீந்தாருக்கு முகம் சுருங்கிவிடும். "அவனுக்கு என்ன கமலா இவ்வளவு இடம் கொடுக்கிறாய். இவ்வளவு நேரம் அவன் இங்கே பேசவேண்டிய அவசியமென்ன? என்ன அவசியம் என்றுதான் கேட்கிறேன்." என்று கோபித்துக் கொள்வார்.

ஜெமீன்தாரின் மனநிலை அக்காவுக்குத்தெரியும். அவருக்கு அவருடைய நண்பர்கள் கமலா வீட்டுக்கு வரவேண்டும் என்பதும் விருப்பம். வருகிறவர்களால் என்ன வம்புவந்துவிடுகிறதோ என்றும் சந்தேகம். பூந்தோட்டம் இருக்கிறது, யாரும் போய்ப்பார்க்கலாம் என்று முனிசிபாலிட்டியார் சொல்லுகிறார்கள். உள்ளே போனால், யாராவதுபூவைப் பறித்துக்கொண்டால் என்ன செய்வது என்று காவலாளியை ஏற்படுத்தி இருக்கிறார்களே, அது போல.

இதை எல்லாம் பார்க்கப்பார்க்க, எனக்கு இத்தகைய வாழ்க்கையே வேண்டாம். முத்துவை மணந்து கொண்டு நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணம் உறுதிப்பட்டது. எனவே நான், மீண்டும்அக்காவிடம் இதுபற்றிப் பேசினேன். முத்துவின் மோகனப்பார்வை என்னை அதிகமாகத் தூண்டிவிட்டது. இந்தச் சமயத்திலே ஒரு நாள் எங்கள் வீட்டில் கோகுலாஷ்டமி கொண்டாடினோம். அன்று இரவு, நாங்கள் இருவரும் பாடினோம். அதற்குப்பலர் வந்திருந்தனர். எனக்கு அன்று பெரியவிருந்து. ஏன் தெரியுமா! முத்துவும், எங்கள் சங்கீதத்தைக் கேட்கவந்திருந்தார். ஆஹா நான் குதுகலத்துடன் பாடினேன். அக்காவுக்குத்தான் விஷயம் தெரியுமே, அவள் இடை இடையே என்னைக் கேலிசெய்தாள், முத்துவுக்குச் சங்கீதத்திலே ஞானம் இருந்தது என்பதும் தெரிந்தது. தாளம் போட்டார், தலை அசைத்தார். "எல்லோரும்தானேதாளம்போடுவார்கள், தலை அசைப்பார்கள்" என்று கேட்பீர்கள் தப்புத்தாளம் போடவில்லை. அனாவசியமான இடத்திலே தலை அசைக்கவில்லை. நல்ல "பிடி"பிடித்த போதுதான் தலை அசைந்தது. சும்மா தொடையைத் தட்டிக்கொண்டிருக்கவில்லை. அவர் தாளம் ஞானத்துடன் போட்டார். ஒரு இடத்திலே நான் "தாளம" தவறிவிட்டேன். அவர் அதைத்தெரிந்துகொண்டு சிரித்தார். அக்காவும் தளுக்கிலே சொக்கித் தாளத்தை விட்டுவிட்டாயா? என்று கேலி செய்தாள்.

வேணுமென்றே அக்கா, அன்று "பேயாண்டிதனைக் கண்டு நீவேண்டி

மையல் கொண்டாய், பெண்களுக் கிது தகுமோ" என்ற பாடலைப்பாட ஆரம்பித்தாள். பாட்டுக்கு அர்த்தம் வேறு தான். இருந்தாலும் என்னைக் கேலி செய்யவே அக்கா அதைப் பாடினாள். குறும்புக்காரி கமலா!

கச்சேரி முடிந்தது. சந்தன தாம்பூலம் வழங்கினாள் கமலா; முத்துவிடம் சந்தனக்கிண்ணத்தை எடுத்துக் கொண்டுபோன போது ஒரு 'ஸ்பெஷல்' புன் சிரிப்புடன் கமலா, முத்துவைப் பார்த்தாள். முத்து முகமெல்லாம் மலர்ந்தான். எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. ஏனெனில் அவன் கமலாவைப் பார்த்த பார்வை எனக்குப் பிடிக்கவில்லை. என் மீது முத்து வழக்கமாகச் செலுத்தும் அதே மோகனப் பார்வையையே கமலா மீதும் செலுத்தினான்.

கோகுலாஷ்டமியன்று முத்து நடந்துகொண்ட விதம் எனக்குப் பிடிக்கவில்லை. என்மீது அவனுக்கு உள்ளன்பு இருப்பின், என்னைக் கண்டுகளிக்கும் சமயம் கிடைத்த போது, அதனை உபயோகித்துக் கொள்ளாது, பலகாரக்கூடையை முறைத்துப் பார்க்கும் பட்டிக்காட்டானைப்போல, அக்காளையும், மற்றும் அங்கு வந்திருந்த மற்றப்பெண்களையும் பார்த்து வந்தது குற்றமல்லவா! அதே இடத்தில் செட்டியார்—ஜெமீன்தாரரின் நண்பர்—நான் பார்ப்பேனா என்று ஏங்கிக்கிடந்தார். அது போல் மற்றும் எத்தனைபேர் இருந்தனர். எனக்கு, ஓய்வு இல்லை மற்றவர்களைப் பார்க்க. முத்துவைப் பார்த்துப் பார்த்துத்தானே நான் பூரித்தேன். அவனுக்கு மட்டும் ஏன் அது போல் இல்லை. எனக்குக் கோபமும் வெறுப்பும் வந்ததிலே தவறு என்ன? ஆண்பிள்ளைகளின் சுபாவமே அது தானோ என்று எண்ணினேன். உருவான யார் எங்கே தென்பட்டாலும் பார்க்கவேண்டியதுதானா? ஒருமுறை, வரம்பு, அளவு, நாகரிகம் இருக்க வேண்டாமா என்றெல்லாம் எண்ணினேன். இதே வெறுப்பில், இரண்டு நாட்கள் நான் மாடிக்குச் செல்லும் வழக்கத்தைக்கூட விட்டுவிட்டேன். ஆனால், முத்துமட்டும் வழக்கப்படி மாடிக்கு வந்ததாக, அக்காசிரித்துக் கொண்டே கூறினாள். "நான் வரவில்லையே என்று தேடியிருப்பார்" என்று நான் கூறினேன். "இல்லை அவனுக்கு நேரமில்லை; என்னைப் பார்த்துப் பார்த்து ஏதேதோ சேஷ்டைகள் செய்தபடி இருந்தான்." என்றாள் அக்காள். என் கோபமும் பயமும், சந்தேகமும் அதிகரித்தது.

மூன்றுநாட்களுக்குப் பிறகு எங்கள் கோயிலிலே தவன உற்சவம் நடந்தது. மிக அழகான உற்சவம். கோயிலருகே ஒரு சிங்காரத் தோட்டம். அதிலே ஒரு குளம். குளத்துக்கு அருகே ஒரு மண்டபம். அதிலே விதவிதமான சித்திரப் பதுமைகள் கல்லினாலேயே செதுக்கப்பட்டிருக்கும். அந்த மண்டபத்திலே தவனம், ரோஜா, முல்லை, மல்லி, வெட்டிவேர் முதலிய பூக்களால் தயாரிக்கப்பட்ட சிறுபந்தல் போடப்பட்டு இருக்கும். அதிலே மாலை "சாமி" அம்மனுடன் வந்து இறங்கினால் நடுநிசிவரையிலே இருக்கும். அதுவரை தோட்டத்திலே காந்த விளக்கின் ஒளி பகல்போல் இருக்கும். தோட்டத்தின் அழகுக்கும் மண்டபத்தின் சிங்காரத்துக்கும் விளக்கின் ஒளிக்கும் கூடியிருக்கும் மக்களின் குதூகலத்துக்கும் எல்லையிராது. ஆணும் பெண்ணும் தனித்தனியாகவும் ஜோடிகளாகவும் குழந்தைகுட்டிகளோடும் நல்ல நல்ல ஆடைகள் அணிந்து கொண்டும், சொந்த நகை, இரவல் நகைஇரண்டு விதமும் போட்டுக்கொண்டும், சிரித்துக்கொண்டும், இளித்துக்கொண்டும் ஆயிரக்கணக்கிலே கூடுவார்கள். வாலிபர்களுக்கு அன்று கொண்டாட்டமென்றால் அவ்வளவு இவ்வளவு அல்ல. கண்ணுக்குச் சரியான விருந்துதான். இரண்டு மூன்றுநாட்களுக்குப் பாவம் சரியான தூக்கமிராது அவர்களுக்கு. தவனத் திருவிழாக் காட்சியைப்பற்றிய கனவு அவர்களைத் தொல்லைப்படுத்திவிடும்.

இத்தகைய களிப்போடு நடக்கும் அந்தவிழா, நள்ளிரவுவரை நடக்கும். 'சாமிக்கு' எதிரிலே கொஞ்சநேரம், வேதபாராயணம் நடக்கும். அதற்குள் "பிரசாதங்கள்" வந்துவிடும். அந்த வாசனை கமகமவெனக் கிளம்பியதும், வேதபாராயணக்காரர்கள் மளமளவெனப் புறப்பட்டு விடுவார்கள். பிரசாதம் வழங்கப்பட்டு அவர்கள் அதனை உண்டு கொண்டிருக்க, மற்றவர்கள், அதைப் பார்த்துக் கொண்டிருப்பர். அது என்ன வழக்கமோ தெரியவில்லை. "ஆண்டவன்" எதிரில் இருக்கும்போதே, ஒரு கூட்டம், வருகிற பிரசாதத்தைத் தின்பதும், மற்றவர்கள், தூரநின்று பார்ப்பதுமா நியாயம்? அவர் எதிரிலேயே இந்த 'அக்ரமம்' நடத்துகிறார்கள். படிப்பது வேதம்! ஆனால் நடக்கிற விதமோ, அநியாயம். சிலர் வெளிப்படையாகவே இதனைப் பற்றிக் கண்டிப்பார்கள். தவளை போல் கத்தினார்கள். உருண்டையைப் போட்டுக்கொண்டார்கள் தொப்பையில்; இனி மலைப் பாம்பு போல மரத்தடியிலே படுத்துப் புரளுவார்கள். அக்ரமம்! கோயில் சொத்து யாருடையது! அதைக் கொடுத்தவர்களின் பரம்பரை பசி ஏப்பக்காரராகி விட்டனர், இவர்கள் பாடு கொண்டாட்டமாகி விட்டது. சாமி, சாமி என்ற சாக்கை வைத்துக்கொண்டு, இந்த ஆசாமிகள்தானே தின்று கொழுக்கிறார்கள் என்று பேசுவார்கள். தனியாக ஒரு பார்ப்பனர் வந்தால் போதும், அவனைக் கேலி செய்து அவன் பயந்து ஓடும்படி செய்துவிடுவார்கள்.

எங்களுக்கு மட்டும் குருக்கள், பிரசாதத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிடுவார்.

இரவு முழுவதும் அந்தத் தோட்டம், கேளிக்கை மண்டபமாகத்தான் இருக்கும். சங்கீதம், நாட்டியம், சாமிக்கு முன் நடக்கும். சாமி பார்க்கிறாரா? பக்கத்திலே நிற்கிற பட்டாச்சாரிகளும் மற்றவர்களும், பார்த்துப் பூரிப்பார்கள்.

விலாசம் விசாரிப்பது, போன வருஷம் சந்தித்தோமே என்று நட்புக் கொண்டாடுவது, அந்தக் குட்டி கோடிவீட்டுக் கோமளத்தின் பேத்தியாம், என்று வர்ணிப்பது போன்ற காரியங்கள் நடந்தபடி இருக்கும்.

ஊடல்காரர்கள், மீண்டும் கூடும் இடமும் தவன மண்டபந்தான். புதிதாக ஜோடிகள் சேருவதும் அங்குதான். அன்றிரவு அங்கு கண்கள் சுழலுவதைப்போல வேறு எப்போதும் சுழலுவது இல்லை என்று கூறலாம்.

இவ்வளவு சந்தோஷமாக, திருவிழா நடக்கும்போது எனக்கொரு

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.